ஆனந்தா
ஊடக உலகம்

# ஆனந்த கங்கைத் தூது




மே 2026
மலர் : 20
இதழ் : 05
₹15

Scanned with OKEN Scanner











## சிவகங்கை மறைமாவட்ட

# குரு மாணவர்கள் சந்திப்பு



## சிவகங்கை மறைமாவட்ட

# இறையழைத்தல் முகாம்

Scanned with OKEN Scanner

ஆனந்தா
ஊடக உலகம்


| பக்கம் | | பகுதி | தலைப்பு | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 03 |  | | ஆசிரியரிடமிருந்து... | |
| 05 |  | ஆய்வும் சுயஆய்வும் | உழைப்பும் போட்டி உணர்வும் | அருள்பணி. ஜெ. மரிய அந்தோணி |
| 07 |  | இம்மாதச் சிறப்பு | அன்னை மரியின் வணக்கமும் வரலாறும் | அருள்பணி. லூர்துராஜ் |
| 12 |  | நலவாழ்வு | முலாம்பலம் | அருள்சகோதரி. லடிஸ்கா |
| 13 |  | சிந்தனைப் பகுதி | மக்களுக்கான ஆட்சியா? மதத்திற்கான ஆட்சியா? | திரு. ச. ஜெயராஜ் |
| 16 |  | சிந்தனைப் பகுதி | வென்று காட்டிய ஒன்று | கவிஞர். எஸ். பிரைட் |
| 17 |  | சிந்தனைப் பகுதி | ஆவியால் உயர்வும் பெந்தகோஸ்து விழாவின் அழைப்பும் | மாரா |
| 20 |  | வாழ்வியல் செய்தி | கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும் | திரு. S. அருள் ஜெயராஜ் |
| 22 |  | வாழ்வியல் செய்தி | தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித யோசேப்பு | அருள்சகோதரி. ஜெனஸ் |
| 26 |  | வாழ்த்து செய்தி | என் உள்ளே வாருங்கள் | அருள்பணி. பிலமோன் |





வெளியிடுபவர்

மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம்** D.D.,Ph.D.,Dr.Theol.
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

ஆசிரியர்

அருள்பணி. **அ. அந்தோணி எட்வர்ட் ராஜ்**

ஆசிரியர் குழு

அருள்பணி. **S. செபஸ்தி**
அருள்முனைவர். **R. மரிய டெல்லஸ்**
அருள்முனைவர். **M.R. சேசு**
முனைவர். **ஸ்டீபன் மிக்கேல்ராஜ்**
திரு. **சோமசுந்தர பாரதி**

ஆலோசகர்கள் குழு

அருள்பணி. **A. சிங்கராயர்**
அருள்சகோ. **அகஸ்டின்**
திரு. **வெட்டிவயல் வளவன்**
திரு. **அலெக்ஸாண்டர்**
திரு. **வியாகுல சந்தியாகு**
திருமதி. **மேரி பாரதி**

அலுவலகம்

**ஆனந்த கங்கைத் தூது**
வியான்னி அருள்பணி மையம்
மதுரை சாலை, சிவகங்கை – 630 561

தொடர்புக்கு

மாதா டிவி : 8883877416
கங்கைத் தூது : 8883877416
மின்னஞ்சல் : anandacommunicationsvg&gmail.com
அலுவலக நேரம் : காலை 9.30 – மாலை 4.30 வரை

சந்தா விபரம்

ஆண்டு சந்தா - ₹ 150
ஆயுள் சந்தா ( 12 ஆண்டுகள் ) - ₹ 1,500

விளம்பரக் கட்டணம்

பின்பக்க அட்டை – ₹ 6,000
அட்டை உள்பக்கம் – ₹ 5,000
முழு பக்கம் – ₹ 3,000
அரைப்பக்கம் – ₹ 1,500


உங்கள் மேலான படைப்புகள்
வந்துசேரவேண்டிய கடைசி நாள்
**12.05.2026**

**மே மாத தலைப்பு**
**"கல்வியே செல்வம்"**

**இதழ் சந்தா / மாதா தொலைக்காட்சி நன்கொடையினை வங்கியில் செலுத்த**

Bank Name : Canara Bank, Sivagangai
Account Name : Communication Commission
A/c. No. : 5157101011835
IFS Code : CNRB0005157

குறிப்பு: தங்கள் சந்தாவினை புதுப்பிப்பவர்கள் பெயர், சந்தா எண், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். வங்கியில் செலுத்துபவர்கள் விபரங்களை SMS செய்யவும்.

# ஆயரின் பயணத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 01 | | இடைக்காட்டூர் | முதல் வெள்ளி திருப்பலி |
| 02 | கா | வியான்னி இல்லம் | ஆசிரியர்கள் கூட்டம் |
| | மா | சூசையப்பர்பட்டணம் | திருவிழாத் திருப்பலி |
| 03 | மா | புஷ்பவனம் | பேராயர் சூசை சேசு வரவேற்பு நிகழ்ச்சி |
| 04 | கா | உலகநாதபுரம் | முதல் திருவிருந்து திருப்பலி |
| | மா | சம்பை | முப்பெரும் விழா கொண்டாட்டம் |
| 05 | | புளியால், கொடுங்காவயல் | திருவிழாத் திருப்பலி |
| 06 | | தஞ்சாவூர் | இயேசுவின் அருள்சகோதரிகள் வெள்ளிவிழா கொண்டாட்டம் |
| 07 | | இராஜகெம்பீரம் | புதிய கொடிமரம் அர்ச்சிப்பு |
| 08 | | சென்னை | திருமணத் திருப்பலி |
| 09 | கா | வியான்னி | மறைமாவட்ட மேய்ப்புப் பணி குழு செயற்குழு கூட்டம் |
| | மா | தேவகோட்டை, புலிக்குளம் | புதிய ஆலயம் அர்ச்சிப்பு விழா |
| 10 | | A.R. மங்களம் | உறுதிபூசுதல் விழா |
| 14 | | சூசையப்பர்பட்டணம் | அமலவை அருள்சகோதரிகள் இல்லம் நூற்றாண்டு விழா |
| 15 | | திருவெற்றியூர் | புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு |
| 16 | கா | சூராணம், உதயனூர் | புதிய கொடிமரம் அர்ச்சிப்புத் திருப்பலி |
| 17 | | சூசையப்பர்பட்டணம், அரசகுளம் | புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு |
| 18 | | மோலசூர் | திருமணத் திருப்பலி |
| 19 | மா | A.R. மங்களம் | புத்தனேந்தல் புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு |
| 20 | | சருகணி | நினைவுத் திருப்பலி |
| 21 | | திருவெற்றியூர் | உறுதிபூசுதல் விழா |
| 22 | | ஓலைக்குடா | கொடியேற்றத் திருப்பலி |
| 23 | மா | மதுரை, கல்லடிப்பட்டி | திருவிழாத் திருப்பலி |
| 24 | கா | முப்பையூர், பிரம்புவயல் | புதிய ஆலயம் அர்ச்சிப்பு |
| | மா | தொண்டி, விலகனேந்தல் | புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு |
| 27 | | சாந்தோம் | திருமணத் திருப்பலி |
| 28 | | மானகிரி, தளக்காவூர் | பவளவிழா மற்றும் வெள்ளிவிழா கொண்டாட்டம் |
| 29 | கா | வீரவநல்லூர் | திருமணத் திருப்பலி |
| | மா | காமநாயக்கன்பட்டி | திருமணத் திருப்பலி |
| 30 | | ஆண்டிச்சியூரணி | புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு |



Scanned with OKEN Scanner

# ஆனந்த கங்கை தூதுவிடமிருந்து...

**"நேர்மையாய் நடந்து கொள்கிறவர்களுக்குப் பத்து மடங்கு நன்மை கிடைக்கும். நேர்மையாய் நடப்பவன் தன் வழியை ஒழுங்கு செய்து கொண்டவனாய் இருக்கிறான்."**

*இனிய வாசக இதயங்களே!*

"ஏறு போல் நட" என்னும் இம்மாத இதழ் வழியாக உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திப்பதிலே மகிழ்ச்சி கொள்கின்றேன். மே மாத விடுமுறையில் கோடை வெயிலின் தாக்கம், நம்மைத் தாக்கினாலும், வியர்வை வியர்த்து கொட்டினாலும் பொழுதை எப்படியாவது எங்கேயாவது கொண்டாடியே தீர வேண்டும் என்ற எண்ணம் நம் அனைவரிடத்திலும் மேலோங்கி நிற்கிறது. ஏறு போல் நட என்னும் தலைப்பு மகாகவி பாரதியின் ஆத்திச் சூடி பகுதியில் எடுக்கப்பட்டது. அதாவது பாரதியின் எண்ணம் ஒவ்வொரு மனிதனும் நேர்மையாக கம்பீரத்துடன் நடக்க வாழ வேண்டும் என்பதாகும். அதாவது ஒவ்வொரு மனிதனும் தலைவனுக்குரிய குணத்தை பெற்று நடக்க வேண்டும்.

மே மாதம் உழைப்பை முதன்மையாகக் கொண்டு தொடங்குகிறது. மே மாதம் உழைப்பின் பாதுகாவலர் புனித யோசேப்பு விழா தொடங்கி அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்த திருவிழாவோடு நிறைவடைகிறது. இவ்விரு விழாக்களும் நமக்கு அறிவுறுத்துவது பொறுப்பை உணர்ந்து கடமையை சரியாக செய்து நேர்மையாக வாழ்ந்தால் இவ்வுலகம் நம்மை போற்றும் வாழ்த்தும் கொண்டாடவும் செய்யும் என்பதாகும். இவ்விதழ் இவ்விடுமுறைக் காலத்தை சரியாக அமைத்துக் கொள்ள, திட்டமிட்டு செயல்பட அழைப்பு விடுக்கிறது.

விடுமுறை ஓய்வு எடுப்பதற்க்காக மாறாக ஓய்ந்தே இருப்பதற்க்காக அல்ல. இயற்கையை பாருங்கள் ஒவ்வொரு நாளும் தன்னை புதுப்பித்துக் கொண்டே வருகிறது. உயிரினங்களைப் பாருங்கள் ஒவ்வொரு நாளும் உழைத்துக் கொண்டே வாழ்கிறது. அறிவியலின் ஆற்றல் ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் நாம் ஒவ்வொரு நாளும் நம்மை புதுப்பித்துக் கொள்கின்றோமா? ஒவ்வொரு நாளும் உழைக்கின்றோமா? ஆற்றலை பெருக்கிக் கொண்டே செல்கின்றோமா? சிந்தித்துப் பாருங்கள்..

திட்டம் சரி இல்லை என்றால் மாற்ற வேண்டியது திட்டத்தை மாறாக இலக்கை அல்ல முதலில் தன்னை மாற்ற விரும்புகிறவன்தான் உலகை மாற்றத் தகுதி உள்ளவன்..

பாஸ்கா காலத்தில் பயணிக்கும் நாம் அனைவரும் நம்மிடையே இருக்கும் சோம்பலை தவிர்த்து சுறுசுறுப்பை அணிந்து கொள்வோம். பொழுது போக்கை கவனத்தில் கொள்ளாது பொறுப்பை கவனத்தில் கொள்வோம். தன்னை உணர்ந்தவர்களாக வாழ்வோம்

அன்பான வாசகப் பெருமக்களே 2023 ஜுன் முதல் 2026 மே வரை தாங்கள் அளித்த ஒத்துழைப்புக்கும், தாங்கள் காட்டிய அன்புக்கும், தாங்கள் செய்த உதவிகளுக்கும் எனது நன்றிகள். இனிவரும் காலங்களில் தாங்கள் தந்த அதே ஆதரவை புதிதாக ஆனந்த கங்கை தூதுவின் ஆசிரியராக பொறுப்பேற்கும் அருள்பணி.மெக்கன்றோ அவர்களுக்கு தந்திட வேண்டுகிறேன். தந்தை அவர்களை ஆனந்த கங்கை தூதுவின் இதழின் சார்பாகவும், வாசகர்கள், எழுத்தாளர்கள், அச்சகத்தார் சார்பாகவும் வாழ்த்தி வரவேற்போம். அவரின் பணி சிறக்க செபிப்போம்.

**அனைவருக்கும் ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள் .**

இயேசுவின் அன்பில்
அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
செயலர், ஊடகப் பணிக்குழு,
சிவகங்கை மறைமாவட்டம்.



Scanned with OKEN Scanner

## சிவகங்கை மறைமாவட்ட அருள்பணியாளர்களின் பணிமாற்ற விபரம் - மே 2026

### பங்கு

| | | |
|---|---|---|
| 1. ஆண்டிச்சியூரணி | : | அருள்பணி. M. ரமேஸ் |
| 2. புஸ்பவனம் | : | அருள்பணி. S. இராஜ ஜெகன் |
| 3. இராஜகம்பீரம் | : | அருள்பணி. V. சேவியர் |
| 4. இராமேஸ்வரம் | : | அருள்பணி. R. மரிய டெல்லஸ் ( கூடுதல் பொறுப்பு முதன்மைச் செயலர் ) |
| 5. சவேரியார்பட்டணம் | : | அருள்பணி. L. அமல்ராஜ் |
| 6. மா. சவேரியார்பட்டணம் | : | அருள்பணி. G. ஜெகநாதன் |
| 7. சி.கே. மங்கலம் | : | அருள்பணி. J. மரிய அந்தோணி |

### நிறுவனங்கள், பணிக்குழுக்கள்

| | | |
|---|---|---|
| 1. திட்டக் குழுச் செயலர் | : | பேரருள்திரு. **R.** அருள் ஜோசப் ( கூடுதல் பொறுப்பு ) |
| 2. தீவு ஒருங்கிணைப்பாளர் | : | அருள்பணி. A. அந்தோணி எட்வர்ட் ராஜ் |
| 3. ஊடகப் பணிக்குழுச் செயலர் | : | அருள்பணி. J. மெக்கன்றோ |
| 4. SMSSS இணைச் செயலர் | : | அருள்பணி. J. மரிய அந்தோணி ராஜ் |
| 5. குருக்கள் மன்றச் செயலர் | : | அருள்பணி. J. சார்லஸ் கென்னடி |
| 6. ஆயரின் செயலர் | : | அருள்பணி. J. கிரிதரன் |

### மேற்படிப்பு

1. அருள்பணி. X. பிரான்சிஸ் பிரசாத்
2. அருள்பணி. J. பாஸ்டின் பாரதி
3. அருள்பணி. J. மரிய அசோக் மேத்தா

### விடுமுறை

1. அருள்பணி. A. தாமஸ் பரிபாலன்
2. அருள்பணி. S. சேவியர் சத்தியமூர்த்தி
3. அருள்பணி. S. சேவியர் ஆரோக்கிய சாமி

### வெளிநாடு

1. அருள்பணி. S. சேசு ஜெயராஜ், USA

### கல்விப்பணி

1. அருள்பணி. G. ஜான் ஆண்டனி தாஸ் பெங்களூர் St. JOHN'S

### அமைதி இல்லம்

1. அருள்பணி. V. புஸ்பராஜ்

### உதவிப் பங்குப்பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. பரமக்குடி | : | அருள்பணி. HGN |
| 2. இராமநாதபுரம் | : | அருள்பணி. MIC |
| 3. ஆர்.எஸ். மங்கலம் | : | அருள்பணி. J. கிளிண்டன் ராஜன் |
| 4. தேவகோட்டை | : | அருள்பணி. ஜோஸ் ஸ்டாலின் MPC |
| 5. ஆண்டாவூரணி | : | அருள்பணி. K. ஸ்டீபன் பீட்டர் SHS |
| 6. இளையான்குடி | : | அருள்பணி. IVD |
| 7. காளையார்கோவில் | : | அருள்பணி. IVD |
| 8. பாம்பன் | : | அருள்பணி. JH |
| 9. புளியால் | : | அருள்பணி. OFM Cap |
| 10. செக்காலை | : | அருள்பணி. A. இனிகோ ஆனந்த் |
| 11. சருகணி | : | அருள்பணி. JH |
| 12. சூராணம் | : | அருள்பணி. R. பிரவின் அருள் செல்வம் |
| 13. த. சூசையப்பர்பட்டினம் | : | அருள்பணி. A. நிக்கோலஸ் SHS |



Scanned with OKEN Scanner



**78**



# உழைப்பும் போட்டியுணர்வும்

அருள்பணி. **ஜெ. மரிய அந்தோனி**
சிவகங்கை மறைமாவட்டம்

**ஆய்வு:**

அமெரிக்காவில் 1960 ல் செய்யப்பட்ட ஆய்வு இது! ஒக்கலஹோமா (Oklahoma) என்ற மாநிலத்தில் Robbers' cave என்ற இடத்திற்கு 11 வயதுடைய மாணவர்கள் பலர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒரு குழு 'கழுகுகள்' (Eagles) என்றும், இன்னொரு குழு 'பாம்புகள்' (Rattlers) என்றும் அழைக்கப்பட்டனர். இரு குழுக்களும் வேறுவேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

தொடக்கத்தில் ஆய்வாளர்கள் எல்லா மாணவர்களையும் பொதுவான செயல்பாடுகளில் ஈடுபடுத்தினர், எனவே இரு குழுக்களுக்கிடையே எந்த வெறுப்புணர்வும் இருக்கவில்லை. பின்பு ஆய்வாளர்கள் மாணவர்களுக்கிடையே போட்டிகளை அறிமுகப்படுத்தி, அதில் மேற்கொண்ட இரு குழுக்களையும் எதிரெதிர் அணிகளில் நிறுத்தினர். போட்டிகளின் எண்ணிக்கை கூடகூட கழுகுகளுக்கும் பாம்புகளுக்கும் இடையே வெறுப்பு அதிகமாக ஆரம்பித்தது. போட்டிக்கு அப்பாற்பட்ட நேரங்களில்கூட இரு குழுக்களும் ஒன்றுக்கொன்று எதிராகத் தங்களது வெறுப்புணர்வைக் காட்டின.

அடுத்ததாக, ஆய்வாளர்கள் மாணவர்களின் வெறுப்புணர்வைக் குறைக்கும் பொருட்டு, இரு குழுக்களையும் திரைப்படம் பார்த்தல், சேர்ந்து விளையாடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தினர். எனினும் அங்கும் அவர்கள் தாமாகவே இரு குழுக்களாகவே பிரிந்து கொண்டு அடுத்த குழுவைக் கிண்டலடித்தல், மட்டம் தட்டுதல் போன்ற காரியங்களைச் செய்தனர்.

இறுதியாக ஆய்வாளர்கள் சில அவசர சூழ்நிலைகளை (Emergency Situations) உருவாக்கினர். அதாவது சில அவசிய தேவைகளுக்காக இரண்டு குழுக்களுமே இணைந்து செயல்பட வேண்டிய கட்டாயச் சூழலை உருவாக்கினர். உதாரணமாக இரு குழுக்களுக்குமே உணவு கொண்டு வந்த ஒரு பெரிய வேன் சேற்றில் மாட்டிக் கொண்டது. (சேற்றில் ஆய்வாளர்களால் மாட்டிக் கொள்ள வைக்கப்பட்டது.) ஒரு குழுவால் மட்டும் வேனைத் தள்ள முடியாது. இரு குழுக்களும் இணைந்து செயல்பட்ட பின்னரே வேன் வெளியே வந்தது. இது போன்ற பல நிகழ்வுகளுக்கு பிறகே இரு குழுக்களுக்கிடையே ஆன வெறுப்புணர்வு குறைய ஆரம்பித்ததாம்.

**சுய ஆய்வு:**

மே முதல் தேதி 'மே தினமாகக்' கொண்டாடப்படுகிறது. இந்நாள் உழைப்பையும் உழைப்பாளர்களையும் கொண்டாடக்கூடிய நாள். உழைப்பிற்கு இரு பரிமாணங்கள் உண்டு: (அ) நம் உழைப்பின் மூலம் நம்மைச் சுற்றியுள்ள உலகை மேம்பட்ட ஒன்றாக நாம் மாற்றுகின்றோம். (ஆ) உழைப்பின் மூலம் நமக்குள்ளே புதைந்து கிடக்கின்ற திறமைகளும் (talent) திறன்களும் (Skills), ஆற்றலும் வல்லமையும் வெளிவர ஆரம்பிக்கின்றன. 'ஆயக்கலைகள் அறுபத்து



Scanned with OKEN Scanner

நான்கு' என்கிறது தமிழ் மரபு. நமக்குள்ளே புதைந்து கிடக்கும் இக்கலைகளையும் திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கு அவசியமானது உழைப்பு.

நமக்குள்ளே புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், நம் உழைப்பின் ஈடுபாட்டைக் கூட்டவும் அறிமுகப்படுத்தப்பட்டவையே போட்டிகள் (Competition). போட்டிகள் நமக்குள் புதைந்திருக்கும் திறமைகளும் திறன்களும் வெளியே வருவதற்கு காரணமாகி, நம் தனிமனித வளர்ச்சிக்கு உதவுகின்றன என்பது உண்மை. எனினும் கொஞ்சம் கவனமில்லாமல் இருந்தால், போட்டி போடுதல் உறவு வாழ்விற்கு மிகப்பெரிய ஊறுவிளைவிக்கக் கூடியதாக மாறிவிடுகிறது என்பதை மனத்திலிருத்துவது அவசியம். நம்மோடு போட்டி போடும் நபரை நம் எதிரியாகவே கருத ஆரம்பித்து விடுகின்றோம். இதையே மேற்கண்ட ஆய்வு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. வாழ்க்கை எனும் விளையாட்டை இரசனையுள்ளதாக மாற்றுவதற்கும், நம் உழைப்பின் திறனைக் கூட்டுவதற்குமான சிறு யுக்தியே போட்டி என்பதை உணராமல், பலர் போட்டியின் மாயையில் சிக்கி உறவையின் மகிழ்வையும் இழந்து நிற்கின்றனர். வெற்றியின் மோகத்தில் வாழ்வை வெற்றிடமாக்கி விடுகின்றனர்.

இன்றைய நுகர்வுக் கலாச்சார உலகில் போட்டியே எல்லாமுமாக ஆகிவிட்டது. உடன் பிறந்தவர்களது குடும்பத்தார்களோடு, பக்கத்தில் வாழக்கூடிய மனிதர்களோடு போட்டிபோட்டு, அவர்களைவிட மேலான நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஏறத்தாழ எல்லா மனிதர்களிடமும் உண்டு. இன்று பல மனிதர்களின் வாழ்க்கை 'புலியைப் பார்த்து பூனை சூடுபோட்ட' கதையாக இருக்கிறது. இதன் காரணமாக பலர் மற்றவர்களைவிட தாங்கள் முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு தங்களது உழைப்பைக் கூட்டினாலும், இத்தகைய உழைப்பு பரபரப்பையும் பதைபதைப்பையும் வாழ்விற்குள் கொண்டு வந்துவிடுகிறது. போட்டியுணர்வின் காரணமாக இன்றைய மனிதர்களால் தளர்வாகவும் இலகுவாகவும் இருக்க முடிவதில்லை. எனவே நோய்களும் வியாதிகளும் மனித வாழ்வின் நிரந்தர அங்கங்களாக மாறிவிட்டன.

மேற்கண்ட ஆய்வு போட்டியுணர்வில் இருந்து வெளி வருவதற்கான மன நிலையையும் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. நாம் நிறைவாகவும் நலமாகவும் வாழ, நம்மைச் சுற்றியுள்ள எல்லா மனிதர்களின் பங்களிப்பும் ஏதோ ஒரு வகையில் நமக்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து, எல்லா மனிதர்களையும் சக பயணிகளாக கருதுவதே அந்த மனநிலை.

---

## ம(ண)னம் மாறு



சகோதரி

சினிமா சகோதரி

எல்லாம் சரி.

வார இதழ்களில்
வருகிறபோது
மார்புகளை மட்டும் கொஞ்சம்
மறைத்துக்கொள்ளக்கூடாதா

பார் பசித்து
பாலுக்கு ஏங்கும்
பச்சிளங்குழந்தை
அம்மாவின்
அவைகளோவென்று
ஆவலோடு தாவுவதை

நல்லாசிரியர் கவிஞர் **எல். பிரைட்**



# அன்னை மரியின் வணக்கமும் வரலாறும்



அருள்பணி. **லூர்துராஜ்**
பங்குத்தந்தை, சருகணி

**முன்னுரை**

கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையில் அன்னை மரியாள் தனித்துவமான இடத்தைப் பெறுகிறார். இயேசு கிறிஸ்துவின் தாயாக மட்டுமல்லாமல், இறைவனின் திருவுளத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியும் நம்பிக்கையின் முன் மாதிரியாகவும் அவர் விளங்குகிறார். உலகம் முழுவதும் கிறிஸ்தவர்கள் அன்னை மரியாவை அன்பும், மரியாதையும் கொண்டு நினைவு கூர்ந்து அவரின் வாழ்க்கையையும், பணிவையும் தங்களது ஆன்மீகப் பாதையில் வழிகாட்டியாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

அன்னை மரியின் வணக்கம் என்பது ஒருசாதாரண மரபு அல்ல, அது ஆரம்ப திருச்சபைக் காலத்திலிருந்தே வளர்ந்து வந்த ஆழமான ஆன்மீகப் பாரம்பரியம் ஆகும். இந்த முன்னுரையின் மூலம் அன்னை மரியின் வணக்கத்தின் அர்த்தம், அதன் வரலாற்று வளர்ச்சி மற்றும் கிறிஸ்தவ வாழ்வில் அதன் முக்கியத்துவம் குறித்து சுருக்கமாக அறிந்துக் கொள்ளலாம்.

**1. வரலாற்றுப் பின்னனி**

அன்னை மரியாளின் வணக்கம் ஆரம்ப காலத்திலிருந்தே வளர்ந்து வந்த ஒரு ஆன்மீக மரபு ஆகும். இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, சிலுவை வேதனை ஆகியவற்றுள் மரியாள் முக்கிய பங்கை வகித்ததால் ஆரம்ப கால கிறிஸ்துவ நம்பிக்கையாளர்கள் அவரைச் சிறப்பாக நினைவு கூரத் தொடங்கினர்.

முதல் நூற்றாண்டிலேயே மரியாள் அவரை "கடவுளின் தாய்" என மதிக்கப்பட்டு பரவ ஆரம்பித்தது. திருத்தூதர்களின் போதனைகளும், ஆரம்ப திருச்சபையின் வாழ்வும், அவரை விசுவாசத்தின் முன்மாதிரிகையாக எடுத்துக் காட்டின. பின்னர் கிறிஸ்தவம் பரவியபோது மரியாவைப் பற்றிய செபங்களும் பாடல்களும் உருவாகின.

கி.பி 431 ஆம் ஆண்டு எபேசு பேராய சபையில் மரியா ‘‘கடவுளின் தாய்’’ (THEOTOKOS) என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அன்னை மரியின் வணக்கம் வரலாற்றில் முக்கியத் திருப்பமாகும். இதன் பின்னர் உலகம் முழுவதும் அவருக்கென ஆலயங்கள் கட்டப்பட்டு, திருநாள்கள் கொண்டாடப்பட்டன.

நடுத்தர காலங்களில் திருச்செபமாலை, மரியாவின் பாடல்கள், திருயாத்திரைகள் போன்ற மரபுகள் உருவாகி, மக்கள் ஆன்மீக வாழ்வில் அன்னை மரியா வணக்கம் "உறுதியான இடம் பெற்றது. இவ்வாறு அன்னை மரியாவின்

வணக்கம்" திருஅவை வரலாற்றோடும், விசுவாசிகளின் ஆன்மீக அனுபவங்களோடும் இணைந்து வளர்ந்தது.

## 2. ஆன்மீக முக்கியத்துவம்

அன்னை மரியா வணக்கம் – கிறிஸ்தவ விசுவாசத்தில் ஆழமான ஆன்மீக அர்த்தத்தைக் கொண்டது. அவர் இயேசுவின் தாயாக இருந்ததினால் மட்டுமல்ல, இறைத்திட்டத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியும் நம்பிக்கையின் முன்மாதிரிகையாக இருந்ததினாலும் விசுவாசிகள் வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறார்.

அன்னைமரியா தாழ்மை, தூய்மை, நம்பிக்கை ஆகிய பண்புகளின் உருவாக விளங்குகிறார். "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா1:37) என்ற அவரது சம்மதம் இறைவனிடம் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கையையும், ஒப்புதலையும் எடுத்துக்காட்டுகிறது.

அன்னை மரியாளின் வணக்கம், புகழ், வேண்டுதல் – இவரை கடவுளாக அல்ல, மாறாக அவரின் வாழ்வை முன்மாதிரியாக ஏற்று இறைவனை நெருங்கும் ஆன்மீகப் பயணம் ஆகும். விசுவாசிகள் தங்கள் துயரங்கள், தேவைகள், நன்றிகள் அனைத்தையும் தாயிடம் பகிரும் மனநிலையுடன் அவரிடம் ஜெபிக்கின்றனர். ஜெபிப்பதால் குடும்ப வாழ்க்கை, சமூக உறவுகள் மற்றும் நம்பிக்கையை ஊக்குவிக்கின்றது. அவர் தாய்மையின் அடையாளமாகவும், கடவுளின் அன்பை மனிதனுக்கு உணர்த்தும் பாலமாகவும் கருதப்படுகிறார்.

## 3. சமூக முக்கியத்துவம்

அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்த போது பாடிய பாடல். (MAGINFICAT) சமூக நீதி நிறைந்த பாடல். சமத்துவத்திற்கான மிக வலிமையான வெளிப்பாடாகும். மரியாவின் பாடலில் சமூக நீதியைச் சுட்டிக்காட்டுகிறது.

i. **தாழ்மையுற்றோரை உயர்த்துகிறார்.** இது சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள், ஆகியோருக்கு இறைவன் ஆதரவாக இருப்பதைக் காட்டுகிறது. சமூகத்தில் சமநிலை வேண்டும் என்ற இறைஏக்கத்தை வெளிப்படுத்துகிறது.

ii. **ஏழைகளுக்கான அக்கறை** பசித்தவர்களை நன்மைகளால் நிறைத்தார் என்று கூறப்படுவது அடிப்படைத் தேவைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற சமூக நீதி எண்ணத்தைக் காட்டுகிறது.

iii. **செல்வத்தின் பொறுப்பு** – செல்வந்தர்களை வெறுமையாய் அனுப்பினார் என்ற வார்த்தைகள் செல்வம் சேர்ப்பது மட்டுமல்ல. மாறாக பகிர்வு மற்றும் பொறுப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

### கன்னிமரியாவின் பாடலின் மையப் பொருள்

மனிதன் உயர்வு, தாழ்வு பார்க்காமல் வாழவேண்டும். ஏழைகள், பலவீனர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதிகாரம், செல்வம் ஆகியவை சேவைக்காகப் பயன்படுத்தவேண்டும். **(லூக்கா1:47–53)** சமத்துவம், கருணை, பகிர்வு ஆகியவற்றை வலியுறுத்தும் சமூக நீதி முக்கியத்தை அறிவிப்பாகவும் கருதப்படுகிறது. (யோவான் 2:1–12) கானாவில் திருமணம். அன்னை மரியின் பரிந்துரை, சமூகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். பிறரின் துயரத்தை உணரும் மனம், மனித மரியாதை காக்கும் செயல் சமூக அக்கறை, மற்றும் பகிர்வு, தேவை காணும் மனம், நடுநிலைப் பாலம், சமூகத்தில் பின் தங்கியவர்களைக் கவனிக்கும் அணுகுமுறை, அவமானத்திற்குள்ளாகும் மனிதர்களின் கண்ணியத்தைக் காக்கும் எண்ணம், சுருக்கமாக அன்னை மரியாள் கானா நிகழ்வில் பரிவு, பரிந்துணர்வு, நடுநிலைப்பணி ஆகியவை சமூகத்தில் தேவையான மதிப்புகளாகும். எனவே அந்த நிகழ்வை சமூக அக்கறை, மனித கண்ணியம், பகிர்வு, சேவை ஆகியவற்றில், அன்னை மரியா சமூக முக்கியத்துவம் கொண்டவராகக் காட்டுகிறது.

திருவிழாக்கள், திருயாத்திரைகள், கூட்டு ஜெபங்கள் போன்ற மரபுகள் மக்களை ஒன்றிணைத்து, சமூக ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன. இவ்வாறு அன்னை மரியாவின் வணக்கம், மனிதநேயம், அன்பு, சமாதானம், பகிர்வு ஆகியவற்றை வளர்க்கும் ஒரு



Scanned with OKEN Scanner



சமூக இயக்கமாக விளங்குகிறது.

**4. விவிலியப் பார்வையில்**

அன்னை மரியாவின் வாழ்க்கையும், வணக்கமும் விவிலியத்தில் முக்கியமான இடம் பெறுகிறது. குறிப்பாக புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்திகளில் மரியாள் இறைவனின் அருளைப் பெற்றவராகவும், நம்பிக்கையின் முன்மாதிரியாகவும் காட்டப்படுகிறார்.

**1. மத்தேயு நற்செய்தி** (Matthew):-

- ❖ மத்1:18–25–இயேசுவின் பிறப்பு குறித்து கூறப்படும்போது மரியா தூய ஆவியால் கருவுற்ற தாயாக அறிமுகப்படுத்தப்படுகிறார்.
- ❖ மத் 2:11 –கிழக்கத்திய ஞானிகள் குழந்தை இயேசுவையும், தாயான மரியாவையும் சந்தித்து வணங்கினர்.

**பார்வை:** மரியா மீட்பரின் தாய். இறைவன் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**மாற்கு நற்செய்தி:** (Mark)

- ❖ மாற் 3:31–35– இயேசுவின் தாய் மற்றும் சகோதார்கள் அவரைத் தேடி வருவது குறிப்பிடத்தக்கதே.

**பார்வை:** மரியா இயேசுவின் குடும்பப் பின்னணியில் காணப்படுகிறார். கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே உண்மையான உறவு என்பதை இந்தப்பகுதி வலியுறுத்துகிறது.

**லூக்கா நற்செய்தி:** (Luke)

- ❖ லூக் 1:26–38 வானதூதர் அறிவித்தபோது மரியா சம்மதிக்கிறார்.
- ❖ லூக் 1:46–55 மரியாளின் பாடல் இறைவனை மகிமைப்படுத்தும் நம்பிக்கை.
- ❖ லூக் 2:19 நடந்த நிகழ்வுகளை மனதில் இருத்தி தியானித்து வைத்திருந்த தாய்.
- ❖ லூக் 2:51 அனைத்தையும் உள்ளத்தில் பாதுகாத்து வைத்தார்.

**பார்வை:** தாழ்மை, கீழ்ப்படிதல், தியானம், நிறைந்த நம்பிக்கை கொண்ட தாய்.

**யோவான் நற்செய்தி** (John)

- ❖ யோவான் 2:1–11 கானாவூர் திருமணத்தில் மரியா பரிந்து பேசுகிறார். இயேசுவின் முதல் அடையாள அதிசயத்திற்கு வழியாகத் திகழ்கிறார்.
- ❖ யோவான் 19:25 சிலுவையின் அடியில் நின்ற தாய்.

**பார்வை:** பரிவு கொண்ட தாய்; மனிதரின் தேவையை உணர்ந்து இயேசுவிடம் கொண்டு செல்லும் நடுநிலைப் பாலம்.

**மொத்த விவிலியப் பார்வை**

மொத்த விலிலியப் பார்வையில் நான்கு நற்செய்திகளும்

- ❖ மரியாளை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாய்.
- ❖ தாழ்மையும் விசுவாசம், நம்பிக்கை கொண்டவர்.
- ❖ மனிதத் தேவைகளை உணரும் பரிவு மிக்க தாய்.
- ❖ இயேசுவின் வாழ்க்கையில் நெருக்கமாக இணைந்தவர் என அறிமுகப்படுத்துகின்றன.

இதனால், அன்னை மரியா விவிவியத்தில் ஒரு வரலாற்று பேராக மட்டுமல்ல. விசுவாசம், நம்பிக்கை, கீழ்ப்படிதல், பரிவு ஆகியவற்றின் முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

**5. அன்னை மரியா திருஅவையின் தனித்துவம்:-**

திருத்தந்தை ஆறாம் பவுல் மரியா திருஅவையின் அன்னை என்று அறிவித்தார் (திப 1:14) இயேசுவின் குழந்தை பருவத்தில் எவ்வாறு மரியா உடனிருந்து, அவரது வளர்ச்சியில்



Scanned with OKEN Scanner

பங்காற்றினாரோ, அதுபோல திரு அவையின் குழந்தைப் பருவத்தில் மரியா உடனிருந்து திருத்தூதர்களோடும், மற்ற அவையினரோடும் இணைந்து திரு அவையின் வளர்ச்சிக்குப் பங்காற்றினார்.

திரு அவையின் மறைபொருளிலே தூய கன்னிமரியா கன்னிமைக்கும், தாய்மைக்கும் தனிப்பட்ட சிறந்த சான்றாக நிற்கிறார் (திருச்சபை எண் 63). எனவே திரு அவைக்கு தனித்துவமாக, திருஅவைத் தன் வாழ்வில் குறிப்பாக மறைத்தூதுப் பணியில் அன்னை மரியாவை தம் கண்முன் கொண்டு பணியாற்றுகிறது.

ஆண்டவரின் தாயைக் கண்டுபாவித்து தூய ஆவியின் வல்லமையால் முழு நம்பிக்கை, தளரா எதிர் நோக்கு, உண்மை, அன்பு இவற்றை கன்னிமை மண்போடு காக்கிறது (திருச்சபை எண் 64). எனவே அன்னை மரியா திரு அவையின் முதன்மையான உறுப்பினர். (திருத்தூதர் பணி 1:14)

திருத்தூதர்களுடன் ஜெபத்தில் கலந்துக்கொண்டவர் என்பதும், ஆரம்ப திருஅவைவாழ்வில் அவரின் இடத்தை வெளிப்படுத்துகிறது. அன்னை மரியாவிடம் இருந்த இறை நம்பிக்கை தூயஆவியானவரை திறந்த மனதோடு வரவேற்றல், நன்றியுணர்வு, வீரம் ஆகிய விழுமியங்களை திரு அவைக்குச் சான்றாக, சான்றுகளாகவும் உந்து சக்தியாகவும் விளங்குகிறது. எனவே திருஅவையின் தாய் அனைத்து மனிதர்களுக்கும் தாய்.



**திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் தந்த ஒழுங்குமுறைகள்-**

1. மே மாதத்தில் கிறிஸ்தவர்கள் தினந்தோறும் காலைத் திருப்பலி காணவும், மாலையில் வணக்க மாதத்துப் பிரார்த்தனை சொல்லவும் கோயிலுக்கு வரவேண்டியது.
2. கூடுமான வரையில் தினமும் திருப்பலி ஒப்புக்கொடுத்து திவ்விய நற்கருணை உட்கொள்ளவது நல்லது.
3. அன்னை மரியின் வணக்க மாதத்திலே கூடிய வரைக்கும் குற்றங்களை விட்டு விலகுதல், பாவத்திற்கு ஏதுவான சோதனைகளை வென்று முயற்சி எடுத்தல் கோயிலுக்கு வரமுடியாத கிறிஸ்தவர்கள் தங்கள் வீட்டிலேயே தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அன்னை சுரூபத்தை வைத்து மாலைவேளை வீட்டில் இருப்பவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஐம்பத்துமூன்று மணி செபம் சொல்லுதல் நன்று.

குடும்பங்களிலும், தேவாலயங்களிலும் சிறப்பாக ஜெபங்கள் நடத்தப்படுவதால் விசுவாசம் வலுப்பெறுகிறது.

### 7. சமூக முக்கியத்துவம்

- ❖ குடும்பங்கள் ஒன்று கூடி செபிப்பது உறவுகளை வலுப்படுத்துகிறது.
- ❖ தேவாலயங்களில் நடைபெறும் அன்புப் பணிகள், ஏழைகளுக்கான உதவிகள் போன்றவை சமூக ஒற்றுமையை வளர்க்கின்றன.
- ❖ பெண்களின் மரியாதை, தாய்மையின் மதிப்பு, பரிவு போன்ற சமூகப்பண்புகள் முன்னிறுத்தப்படுகின்றன.
- ❖ குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோருக்கு ஆன்மீக மற்றும் ஒழுக்க மதிப்புகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.
- ❖ மே மாதம் அன்னை மரியாளின் நினைவூட்டவால் ஆன்மீக நம்பிக்கையை



Scanned with OKEN Scanner

ஆழப்படுத்தும் மாதமாகவும், அன்பு, சேவை, ஒற்றுமை, பகிர்வு, ஆகிய சமூக மதிப்பீடுகளை வளர்க்கும் காலமாகவும் விளங்குகிறது.

## 8. நமது வாழ்க்கைக்கு

அன்னை மரியாளின் வாழ்க்கையும் பண்புகளும் நமது தினசரி வாழ்வுக்கு முக்கியமான வழிகாட்டுதலாக உள்ளன. அவர் காட்டிய தாழ்மை, கீழ்ப்படிதல், நம்பிக்கை பொறுமை ஆகியவை ஒவ்வொரு மனிதரும் பின்பற்ற வேண்டிய குணங்களாகும்.

இறைவன் நமக்குத் தரும் அழைப்பை மரியாள் போல ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுடன் வாழ்வது நமது ஆன்மீக வளர்ச்சிக்குப் பாதையாக அமைகிறது. சிரமங்களும், துயரங்களும் வந்தாலும் இறைவனை நம்பி உறுதியுடன் நிற்கும் மனநிலையை அவர் கற்றுத்தருகிறார்.

குடும்ப வாழ்க்கையில் அன்பு, பொறுப்பு, பரிவு ஆகியவற்றை வளர்க்கவும், சமூகத்தில் ஏழைகள், மற்றும் உதவி தேவைப்படுவோருக்கு கருணையுடன் அணுகவும் மரியாள் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்.

மேலும் ஜெப வாழ்க்கையில் நிலைத்திருக்கும் பழக்கம், இறைவனுடன் உறவை வலுப்படுத்தும் முயற்சி அமைதியான மனநிலை ஆகியவற்றை வளர்க்கும் பாதையை அன்னை மரியா நமக்குக் காட்டுகிறார்.

எனவே அன்னை மரியாவின் வாழக்கை, வரலாறும், வணக்கமும் நம்மை நல்ல மனிதர்களாகவும் உறுதியான விசுவாசிகளாகவும் மாற்றும் ஆன்மீக ஒளியாக விளங்குகிறது.

## முடிவுரை

- ❖ அன்னை மரியாள் இறைவனின் திருவுளத்திற்கு கீழ்ப்படியும் விசுவாசத்தின் முன்மாதிரி.
- ❖ செபம், தியானம், தாழ்மை ஆகியவற்றில் நிலைத்திருக்க கற்றுத் தருகிறார்.
- ❖ இயேசுவை நெருங்கிச் செல்லும் ஆன்மீக வழிகாட்டியாக விளங்குகிறார்.
- ❖ தாயாக மனிதரின் தேவைகளை இறைவனிடம் எடுத்துச் சொல்லும் பரிவு உள்ளம்.
- ❖ அன்னை மரியின் பக்தி குடும்ப ஒற்றுமை மற்றும் பெண்களின் மரியாதையை உயர்த்துகிறது.
- ❖ ஏழைகள், பின் தங்கியவர்கள் மீது அக்கறை கொள்ள ஊக்குவிக்கிறது.
- ❖ சமூகத்தில் அமைதி, ஒற்றுமை, சேவை மனப்பான்மையை வளர்க்கிறது.
- ❖ இறைவனை நம்பி சிரமங்களைத் தாங்கும் உறுதியுடன் வாழச் செய்கிறது.

அன்னை மரியாள் வணக்கம், நம் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்தி, சமூக வாழ்வை நலமாக்கி, மனிதநேயப் பண்புகளுடன் வாழ வழிகாட்டுகிறது. அவரின் வாழ்க்கை நம்மை நல்ல நம்பிக்கை விசுவாசிகளாகவும், நல்ல மனிதர்களாகவும் உருவாக்கும் ஒளியாக விளங்குகிறது.

துயரத்தில் துணையாகவும், மகிழ்ச்சியில் தாயாகவும், விசுவாசப் பாதையில் ஒளியாகவும் அன்னை மரியாள் எப்போதும் நம்முடன் நிற்கிறார். அன்னை மரியின் வாழ்வு நமக்கு ஒரு பாடம். அன்புடன் வாழும்போது நமது வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமையும். அன்னை மரியாள் வணக்கம் என்பது வெறும் பக்தி நடைமுறை அல்ல, அது மனித இதயத்தை மாற்றும் அன்பின் பள்ளியாகும்.

நம் விசுவாசப் பயணத்தில் வழிகாட்டும் நட்சத்திரமாக அன்னை மரியாள் நிலைத்திருக்கிறார்.

அவரின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் மௌனப்பாடம் அன்பு கொடு உலகம் மலரும்.

நம்பிக்கை வை – வாழ்க்கை வலிமை பெறும்.

மரியன்னையைப் பிடித்து நட – பாதை ஒளிவிடும் அன்னை மரியாளின் பாதம் பின்பற்றும் ஒவ்வொருவரின் வாழ்வும், கருணை நிறைந்த சேவையாகவும், ஒளிதரும் சாட்சியாகவும் மாறட்டும்.



Scanned with OKEN Scanner



# முலாம்பழம்



அருள்சகோதரி. **லடிஸ்கா,**
நலவாழ்வு இல்லம், முத்துப்பட்டி

முலாம்பழம் கொடி வகையைச் சேர்ந்த ஒரு பயிர். ஆழமான வளமான அல்லது மணல்கலந்த செம்மண் இப்பயிர் வளர்வதற்கு ஏற்றது. டிசம்பர் முதல் ஜனவரி வரை விதைப்பது கோடைகால அறுவடைக்கு ஏதுவாக இருக்கும். இப்பழத்தின் உள்ளே ஆரஞ்சு நிறச் சதையும், நடுவில் விதைகள் மற்றும் வெள்ளரிப் பழத்தைப் போன்ற அமைப்பும் இருக்கும். ஆரோக்கியமான மற்றும் சுவையான இப்பழம் கோடைகால வெப்பத்தைத் தணித்து உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றது.

**தாவரவியல் பெயர் :** Cucumis melon

**வேறு பெயர் :** கக்கரிக்காய், கோசாப்பழம், கிர்ணிப்பழம், Musk melon

**செய்கை :**

குளிர்ச்சியுண்டாக்கி
சிறுநீர் பெருக்கி
உரமாக்கி
மலமிளக்கி

**சத்துகள்:**

100 கிராம் முலாம்பழத்தில் புரதம் 0.3 கி, கொழுப்பு 0.2 கி, நார்ப்பொருள் 0.4 கி, மாவுப்பொருள் 3.5 கி, கால்சியம் 32.மிகி, பாஸ்பரஸ் 14மிகி, இரும்புச் சத்து 14மிகி, தையமின் 0.11 மிகி., ரிபோஃளேவின் 0.08மிகி., நியாசின் 0.3மிகி., வைட்டமின் சி 26மிகி., மெக்னீசியம் 31 மிகி., சோடியம் 104.6 மிகி., பொட்டாசியம் 341 மி.கி., தாமிரம் 0.03 மி.கி., கந்தகம் 32 மி.கி., குளோரின் 80 மி.கி., சக்தி 17கிலோ கலோரி, கரோட்டின் 169 மைக்ரோ கிராம்.

**மருத்துவப் பண்புகள் :**

**பழம் :**

முலாம்பழம் சக்கரைச் சத்து மிகுந்து இனிப்பாக இருக்கும். இப்பழத்தின் தோலை நீக்கிவிட்டு உட்சதையை உண்பது வழக்கம். பழச்சதையைப் பயன்படுத்தி சர்பத் செய்து குடிப்பதும் உண்டு.

இப்பழம் குளிர்ச்சியைத் தரும்
பழுத்த பழம் வயிறு மந்தத்தைப் போக்கும்
உடலுக்கு உறுதியைத் தரும்.
மலத்தை இலக்கும்
சிறுநீரைப் பெருக்கும்
உடல் சோர்வை நீக்கும்

இதிலுள்ள மிகுதியான சத்துக்கள் கண்கள், இதயம், இரைப்பை மற்றும் மூளைக்குச் சிறந்தது.

பழரசம் தாய்ப்பால் சுரக்க உதவும்.

பழச்சதையை பிசைந்து முகத்தில் பூச முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கும்.

**விதை :**

விதையும் சத்து மிகுந்தது.
குளிர்ச்சியைத் தரும், சிறுநீரைப் பெருக்கும்
உடலுக்கு வலிமையைத் தரும்.
மண்ணீரல் வீக்கத்தைக் குறைக்கும்
வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்
வலியுடன் சிறுநீர் கழித்தலுக்கு நல்லது.

**நிறைவாக**

சுவை மிகுந்த முலாம் பழம் உடலைக் குளிர்விப்பதோடு பல்வேறு நன்மைகளை வழங்கும். சிறந்த இயற்கை உணவு. எனவே, இந்தக் கோடைக் காலத்தில் முலாம் பழத்தை அவ்வப்போது உணவாகவோ, பானமாகவோ எடுத்துக்கொண்டு உடல் நலனைக் காத்து ஆரோக்கியமான வாழ்வு வாழ்வோம்.



Scanned with OKEN Scanner




# மக்களுக்கான ஆட்சியா? மதத்திற்கான ஆட்சியா?

ச. ஜெயராஜ்
உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் ஓய்வு, சாலைக்கிராமம்

இந்தியா ஒரு சனநாயக நாடு என்று உலகளவில் போற்றப்படுகின்றது. மக்களால், மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சி மக்காட்சி என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் மக்களுக்கான ஆட்சி இந்தியாவில் நடைபெறுகின்றதா?

2014-ல் பொய்ய்ய்.....யான வாக்குறுதிகளைக் கூறு நாட்டு மக்களை ஏமாற்றி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த ஒன்றிய பாசக அரசு பாசிச அரசு தான் அரியணை ஏறிய நாளிலிருந்து இன்று வரை மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்கின்றார்கள் என்றால்.... கேள்விக்குறி தான்?........

ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும் வறுமை ஒழிப்பு, விவசாய வளர்ச்சி, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், சுகாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பை அதிகரித்தல், கல்வி வளர்ச்சி, ஏழைகளுக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல், பெண்களின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு, தொழில் வளர்ச்சி, அனைத்துத் துறைகளுக்குமான வளர்ச்சி போன்றவற்றிற்கான திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்வதே ஆட்சியாளர்களின் தலையாய கடமையாகும்.

ஆனால் மக்களுக்கான திட்டங்கள் நிறைவேற்றுவதைத் தவிர்த்து மக்கள் அல்லல்படக்கூடிய திட்டங்கள் எதுவோ அத்திட்டங்களை, சட்டங்களை நிறைவேற்றி மக்களை மதத்தால், மொழியால் வேறுபடுத்தி, இந்தி பேசாத மாநிலங்களை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்தியும் "இந்தியா இந்து நாடு" இங்கு வேற்று மதத்தினர் வாழக்கூடாது என்கின்ற வெற்று சித்தாந்தத்தை முன்வைத்தும் மக்களைப் பிரித்தாண்டு தொடர்ச்சியாக மூன்று முறை ஆட்சிக்கட்டிலைப் பிடித்தது பாசக. ஆட்சிக்கு வந்த நாள் தொடங்கி மக்களுக்கு எதிரான சட்டங்களையும், விவசாயிகளுக்கு எதிரான சட்டங்களையும் மதத்திற்கு எதிரான சட்டங்களையும் நிறைவேற்றுவதையே ஒன்றிய அரசு தனது முதன்மையான பணியாகக் கொண்டுள்ளது.

**ஏழைகளுக்கு எதிரான சட்டம் - 2014**

பணம் மதிப்பிழப்பு சட்டத்தைக் கொண்டுவந்து ஏழை மக்களை நடுத்தெருவில் நிறுத்தியும், வங்கி வாசலில் காத்திருக்கச் செய்தும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்ததோடு மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கான உயிர்களை காவு வாங்கியது பறித்துச் சென்றது.



Scanned with OKEN Scanner

**சிறுபான்மையினருக்கு எதிரான சட்டம் - 2019**

குடியுரிமைத் திருத்தச் சட்டம் ( Citizenship amendment Act ) ஒன்றை நிறைவேற்றி சிறுபான்மையினரைக் குறிப்பாக இஸ்லாமியர்களை வீதியில் போராட வைத்தது.

**விவசாயிகளுக்கு எதிரான சட்டம் - 2020**

ஒன்றிய அரசு செப்டம்பர் 2020ல் விவசாயிகளுக்கான மூன்று முக்கிய வேளாண் சட்டங்களை நிறைவேற்றியது. இந்தச் சட்டங்களுக்கு நாடு முழுவதும் விவசாயிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து, நவம்பர் 2021 ல் இந்தச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன. ஆனாலும் தலைநகர் டில்லியில் போராடியவர்களில் நூற்றுக்கணக்கானோர் மாண்டு போயினர் என்பது மன்னிக்க முடியாத வரலாறு.

**இசுலாமியர்களுக்கு எதிரான சட்டம் - 2024-2025**

வக்பு வாரியத் திருத்த மசோதா மூலம் வாரியத்தின் சொத்துக்களை வெளிப்படைத் தன்மை இல்லை என்ற காரணத்தினால் பறித்துக் கொண்டது. இது முற்றிலும் இசுலாமியர்களுக்கு எதிரான சட்டமேயாகும். இம்மசோதா வக்பு வாரியச் சொத்துக்களை பாதுகாத்தல், முறைப்படுத்துதல் என்ற பெயரில் வக்பு வாரியச் சொத்துக்களை பறித்துக்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.




**கிறிஸ்தவர்களுக்கு எதிரான சட்டம் - 2026**

தற்பொழுது ஒன்றிய அரசு வெளிநாடு ஒழுங்குமுறை நிதி உதவி திருத்த மசோதா (FCRA - Foreign contribution Regulation Act - 2026 ) சட்டத்தை நிறைவேற்ற முயற்சித்து மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மசோதாவின் படி காரணம் இன்றி கிறித்தவக் கல்வி நிறுவனங்களை மூட முடியும். கிறித்தவத் தொண்டு நிறுவனங்களின் உரிமையை எந்த நேரத்திலும் பறித்துக்கொள்ள முடியும். ஏற்கனவே, 2500 தொண்டு நிறுவனங்களின் உரிமையை ரத்து செய்து சாதனை படைத்துள்ளது. தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி இந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

எவ்வாறு கிறித்தவர்கள் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கிறார்கள்?.... இதுவரை எவரையாவது ஆதாரம் காட்டியுள்ளீர்களா? எந்த நிறுவனமாவது தேசிய பாதுகாப்பிற்கு முரணாகச் செயல்பட்டுள்ளதா? கிறித்தவர்கள் தொடக்க கால முதல் நாட்டின் பாதுகாப்பிற்கு அரணாக வாழ்ந்திருக்கிறார்களேயொழிய முரணாக வாழ்ந்ததில்லை. கிறித்தவர்களுக்கு முதன்மையானது நாடுதான், அடுத்துதான் மதம் என்று திருஅவை கற்றுக்கொடுத்துள்ளது.

நாட்டின் அமைதி மட்டுமல்லாமல் உலக அமைதிக்காக திருத்தந்தை அவர்களின் வேண்டுகோளின்படி மேற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் போர்பதற்றம் நீங்குவதற்காக இடைவிடாமல் இறைவேண்டல் செய்துகொண்டிருக்கிறோம். அமைதியும், அன்பும், பரிவும், இரக்கமும், தியாகமும் எங்களது தாரக மந்திரம். அப்படியிருக்க நாங்கள் ஏன் தேசிய பாதுகாப்பிற்கு இடையூறாக இருக்க வேண்டும்.

இந்த மசோதாவால் ஆதரவற்றோர் இல்லங்கள் மூடக்கப்படும் அபாயம்

உள்ளது. குறிப்பாக இம்மசோதா தமிழ்நாட்டைக் குறிவைத்து தாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்தியாவில் தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதற்கு காரணம் கிறித்தவ சபைகளால் நடத்தப்படும் ஆதரவற்றோர் இல்லங்கள். இவ்வில்லங்களில் ஏழை மாணவர்களுக்கு மிக மிகக் குறைந்த செலவில் ஏன், இலவசமாகக் கூட வெளிநாட்டு உதவியுடன் உணவு, உறைவிடத்துடன் கூடிய கல்வி அனைத்து மதத்தினருக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

1971-ல் சூராணம் நடுநிலைப் பள்ளியில் 8-ஆம் வகுப்பு முடித்தேன். வகுப்பில் நான்தான் முதல் மாணவன். குடும்பப் பொருளாதார சூழல் காரணமாக உயர்நிலைக் கல்வியை தொடர முடியாத நிலை. 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நடந்துசென்று படிக்க அனுமதிக்காத உடல்நிலை. என் பெற்றோர்களால் என்னைப் படிக்க வைக்கவும் வசதி இல்லை. முதல் மாணவன் என்பதால் படிப்பை நிறுத்திவிடவும் விரும்பவில்லை. அப்பொழுது திறந்த கதவுதான் திருவரங்கம் முடியப்பர் மாணவர் இல்லம். மாதம் 10 ரூபாய் செலுத்தி விடுதியில் தங்கி திரு இருதய உயர்நிலைப் பள்ளியில் என்னுடைய உயர்நிலைக் கல்வியை நிறைவு செய்தேன். மாணவர் இல்லத்தில் என்னைப் போன்ற கிறித்தவர்கள் மட்டும் பயிலவில்லை. நூற்றுக்கணக்கான இந்துக்களும் இசுலாமிய மாணவர்களும் விடுதியில் தங்கிப் படித்தனர். 1970 களில் இந்தப் பகுதியினர் மட்டுமல்லாமல் வெளிமாவட்ட ஏழை மாணவ மாணவிகளின் கல்விக்கு வித்திட்டது திருவரங்கத்தில் அருட்தந்தையர்களால் அருட்சகோதரிகளினாலும் நடத்தப்பட்ட ஆதரவற்றோர் (Orphanage) இல்லங்கள் தான்.

புதிய சட்ட திருத்த மசோதா மூலம் உரிமை புதுப்பிக்கப்படவில்லை என்று காரணம் காட்டி கிறித்தவ நிறுவன சொத்துக்களை ஒன்றிய அரசே எடுத்துக்கொள்ள வழிவகை செய்கிறது. தொண்டு நிறுவனங்களில் உரிமம் எந்த நேரத்திலும் ஒன்றிய அரசால் ரத்து செய்ய முடியும் என்று வழக்கறிஞர் திரு. வில்சன் அவர்கள் தன்னுடைய முகநூல் பதவில் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும், கைவிடப்பட்டோருக்கும் உதவுவதற்காக நலத்திட்டங்கள் செயல்படுத்துவதற்காக பல்நோக்கு சமூக சேவை சங்கம் (Multipurpose Social Society ) தொண்டு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. நேர்மையாகச் செயல்படவில்லை என்ற இரண்டே சொற்களில் நிறுவனங்களின் உரிமத்தை ரத்து செய்வதுடன் சொத்துக்களை மிரட்டி ஒன்றிய அரசே சுருட்டிக்கொள்ளவும் இம்மசோதா வழிவகை செய்கிறது.

இந்தியா கூட்டணியின் கடும் எதிர்ப்பினால் மசோதாவைத் தாக்கல் செய்யாமல் தற்காலிகமாக ஒன்றிய அரசு நிறுத்தியுள்ளதாகவும், புதிய சட்ட மசோதா நிர்வாகக் குறைபாடுகள் என்ற பெயரில் சொத்துக்களை பறிமுதல் செய்யும் மிக மோசமான விதிகளைக் கொண்டது. இது காலனிய காலத்திற்கு சட்டத்தைவிடக் கொடியது. கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த கிறித்தவ அமைப்புகளின் சேவை நிறுவனங்களை குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு சீர்குலைக்கும் பாசக வின் அப்பட்டமான முயற்சி என்று மக்களை உறுப்பினர் சு.வெங்கடேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கான வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்றிட வேண்டுமென்ற எண்ணமின்றி மதவெறியைத் தூண்டிவிட்டு இந்தியா இந்து நாடு என்பதை நிலைநிறுத்த மதங்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றி பாசக என்ன சாதிக்கப் போகிறது? இது மக்களுக்கான ஆட்சியா?... மதங்களுக்கான ஆட்சியா?... என்பதே நம்முன் எழுப்பப்படுகின்ற கேள்வி....

**"மதத்தை அரசியலாக்குபவர்களுக்கு ஐயோ கேடு"** - திருத்தந்தை லியோ.



# வென்று காட்டிய ஒன்று

(மே 1- தொழிலாளர் தினம்)

- நல்லாசிரியர் கவிஞர் **எல்.பிரைட்**

பணிவாய்க் கிடைந்த
பவளக்கொடிகள்
துணிவாய் எழுந்து
துடித்தன வெடித்தன

மலராய்ப் பிறந்த
மகளிர் படைகள்
புயலாய்க் கிளம்பி
புரம்சிகள் வெடித்தன

துப்பாக்கி குண்டுகள்
துப்பிய நெருப்பில்
சிகாகோ நகரமே
சிவந்தன சீறின

ஆதிக்கம் செலுத்திய
அரண்மனை வாயில்கள்
அன்றோடு முடிவில்
அதிர்ந்தன தகர்ந்தன

அயர்வைப் போக்கி
உயர்வைக் கொடுத்த
வியர்வைத் திருநாள்
மே ஒன்று

உழைத்து உழைத்து
களைத்த சனத்தை
நினைத்து வணங்கும்
நான் இன்று

வியர்வைத் துளிகள்
விருதுகள் வேண்டி
குருதித் துளிகள்
குமுறிய தினம்

செந்நீர் குடித்த
செல்வருக்கெதிராய்
கண்ணீர்த் துளிகள்
கிளம்பிய தினம்

கூலிகள் கேட்டு
குனிந்த முதுகுகள்
நீதிகள் கேட்டு
எழும்பின தினம்

உழைக்கும் மக்களின்
உரிமை கோஷம்
உலகம் எங்கிலும்
முழங்கிய தினம்

அடக்கு முறைகளும்
ஆதிக்க வெறியும்
உழைக்கும் மனிதரின்
உணர்வைப் பழித்தன

எதிர்த்துக் கேட்ட
ஏழைச் சனங்களின்
உடம்பில் சுட்டு
உயிரைப் பறித்தன

சினந்த விழியும்
சிந்திய துளியும்
விலங்குகள் உடைத்து
விடுதலை மீட்டது

உயர்ந்த கரமும்
உரிமைக் குரலும்
புதிய விடியலை
பூமிக்குக் கொடுத்தது

மழைத்துளி போன்றே
வியர்வைத் துளிகளும்
உயர்ந்தவை என்று
உரக்கச் சொல்வோம்

உழைக்கும் கரங்களில்
உதடுகள் பதித்து
நாளைக்கும் பிறகும்
நன்றிகள் செய்வோம்

மனிதனின் உழைப்பை
முடிக்கப் பார்க்கும்
கணிப்பொறி ஆதிக்கம்
கவனத்தில் கொள்வோம்

உழைக்கும் மக்களின்
உறுதுணையோடு
உலகில் சாதனை
அனைத்தையும் வெல்வோம்.



Scanned with OKEN Scanner



# ஆவியார் உயர்வு பெந்தகோஸ்து விழாவின் அழைப்பு

மாரா

**முன்னுரை**

"ஏறுபோல் நட" என்பது மனித வாழ்க்கையின் உயர்வை நோக்கிய அடிப்படை அழைப்பு. ஏறு எப்போதும் மேல் நோக்கிச் செல்லும் தன்மையை உடையது. அது தடைகள் இருந்தாலும் பின்னடையாது. அதுபோல், மனித வாழ்க்கையின் தொடர்ந்து வளர்ச்சி மற்றும் உயர்வு நோக்கி நகர வேண்டும். ஆனால் இந்த உயர்வு வெறும் வெளிப்புற சாதனைகளில் - பணம், பதவி, புகழ் - மட்டும் அடங்கியதல்ல. அது உள்ளார்ந்த மாற்றத்தில் உள்ளது.

உண்மையான உயர்வு மனிதனின் மனப்போக்கு, சிந்தனை மற்றும் ஆன்மீக நிலை மாற்றத்தில் வெளிப்படுகிறது. இந்த உள்ளார்ந்த மாற்றத்தை தெளிவாக வெளிப்படுத்தும் ஆன்மீக நிகழ்வே பெந்தகோஸ்து விழாவாகும். மனிதன் தன் இயல்பான பலவீன நிலையிலிருந்து - பயம், குழப்பம், தளர்ச்சி - கடவுளின் ஆவியின் வல்லமையால் உயர்த்தப்படுகிறான். இந்த மாற்றம் வெளியில் இருந்து திணிக்கப்படுவதல்ல; அது உள்ளத்திலிருந்து எழும் புதிய வாழ்வு

ஆகையால், பெந்தகோஸ்து விழா நமக்கு ஒரு உண்மையை நினைவூட்டுகிறது. உயர்வு என்பது முயற்சியால் மட்டும் கிடைப்பதல்ல; அது கடவுளின் ஆவியுடன் இணைந்த வாழ்வில் நிறைவேறும். இதுவே இந்தக் கட்டுரையின் மையக் கருத்தாகும்.

**பெந்தகோஸ்து நிகழ்வின் அடிப்படை விளக்கம்**

பெந்தகோஸ்து விழா, இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகு ஐம்பதாம் நாளில் நிகழ்ந்த ஒரு முக்கியமான ஆன்மீக நிகழ்வாகும். அப்போஸ்தலர்கள் ஒரே இடத்தில் ஒன்றுபட்டு, எதிர்பார்ப்பும் ஜெப மனப்பான்மையும் கொண்டு இருந்தபோது, திடீரென வானத்திலிருந்து பலத்த காற்றின் ஓசையைப் போன்ற சத்தம் எழுந்தது. அது அவர்கள் இருந்த இடம் எங்கும் நிரம்பியது. "தீ நாவுகள் போல தோன்றியவை அவர்கள்மேல் அமர்ந்தன" (திப 2:3).

இந்த நிகழ்வு வெறும் வெளிப்புற அதிசயம் மட்டுமல்ல; அது கடவுளின் ஆவி அவர்கள்மேல் இறங்கி அவர்களின் வாழ்க்கையில் புதிய கட்டத்தை ஆரம்பித்ததற்கான வெளிப்பாடாகும். "காற்று" உயிரூட்டும் ஆவியின் செயலையும், "தீ" சுத்திகரிப்பையும் ஆற்றலையும் குறிக்கிறது. இதன்மூலம் அவர்கள் உள்ளார்ந்த மாற்றத்திற்கும், புதிய பணி ஆரம்பத்திற்கும் அழைக்கப்பட்டனர். இதுவே, பெந்தகோஸ்தே ஒரு சாதாரண நிகழ்வாக அல்லாமல், திருச்சபையின் தொடக்கமாகக் காண வழிவகுக்கிறது.

**காத்திருப்பு: ஆன்மீகத் தயாரிப்பின் அவசியம்**

பெந்தகோஸ்து நிகழ்வுக்கு முன், அப்போஸ்தலர்கள் உடனடியாகச் செயல்படவில்லை. அவர்கள் காத்திருந்தனர். இந்த

காத்திருப்பு சோம்பேறித்தனமான அமைதி அல்ல; ஆனால் ஜெபம், நம்பிக்கை, மற்றும் ஒன்றுபட்ட மனநிலை கொண்ட ஆன்மீகத் தயாரிப்பாகும். "அவர்கள் அனைவரும் ஒருமனதோடு ஜெபத்தில் உறுதியாய் இருந்தார்கள்" (திருத்தூதர்பணிகள் 1:16)

இந்த நிலையில் அவர்கள் கடவுளின் வாக்குத்தத்தத்தை நம்பி, தங்களைக் காத்திருந்தனர். இந்த காத்திருப்பு அவர்களின் மனதைத் தயார் செய்தது. அவர்களைப் பெறவிருந்த ஆவியின் செயலுக்கு திறந்தவர்களாக மாற்றியது. இதன்மூலம் நாம் அறியவேண்டியது - உயர்வு உடனடியாக ஏற்படாது. அது தயாரிப்பையும் பொறுமையையும் தேடுகிறது.

ஆகையால், ஆன்மீக வாழ்க்கையில் காத்திருப்பு என்பது இழப்பான காலம் அல்ல. அது வளர்ச்சிக்கான முக்கியமான கட்டமாகும். நம்முடைய வாழ்க்கையிலும், கடவுளின் செயலுக்காக அமைதியாகக் காத்திருந்து, நம்மைத் தயார்படுத்திக்கொள்வது உண்மையான உயர்விற்கான அடித்தளமாகும்.

**ஆவியின் வருகை: கடவுளின் செயல்**

பெந்தகோஸ்து நிகழ்வு மனித முயற்சியின் விளைவு அல்ல; அது முழுமையாக கடவுளின் அருளின் வெளிப்பாடு. அப்போஸ்தலர்கள் எந்தவிதமான வெளிப்புற சக்தியையும் உருவாக்கவில்லை. அவர்கள் காத்திருந்தனர், ஜெபித்தனர், தயாராக இருந்தனர். அப்போது "அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர்" (திருத்தூதர் பணிகள் 2:4)

இந்த அனுபவம் அவர்களின் வாழ்க்கையில் ஒரு புதிய சக்தியை ஏற்படுத்தியது. அவர்கள் தங்கள் சொந்தத் திறமைகளால் அல்ல, கடவுளின் ஆவியின் வல்லமையால் செயல்படத் தொடங்கினர். இதன்மூலம் நாம் அறிகிறோம் - உயர்வு என்பது மனித முயற்சியின் உச்சமல்ல; அது கடவுளால் அளிக்கப்படும் அருள்பரிசு. மனிதன் தன்னை திறந்து கொடுத்தால், கடவுள் அவனை உயர்த்துகிறார்.

**மொழிகளின் அவசியம்: உலகளாவிய செய்தி**

பெந்தகோஸ்து நிகழ்வில் இடம்பெற்ற முக்கியமான அம்சம், அப்போஸ்தலர்கள் பல மொழிகளில் பேசத் தொடங்கியது. இது ஒரு அற்புதமான நிகழ்வாக இருந்தாலும், அதற்கு ஆழமான அர்த்தம் உள்ளது. கடவுளின் செய்தி ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, மொழிக்கோ மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை இது வெளிப்படுத்துகிறது. "ஒவ்வொருவரும் தங்கள் தாய்மொழியில் அவர்களைப் பேசக் கேட்டார்கள்" (திருத்தூதர்பணிகள் 2:6) இதன்மூலம் கடவுள் ஒவ்வொருவரையும் அவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைக்குள் சந்திக்கிறார் என்பதை நாம் உணர்கிறோம். இந்த நிகழ்வு திருச்சபையின் பணி எல்லைகளைத் தாண்டி உலகமெங்கும் பரவ வேண்டியதைக் காட்டுகிறது. ஆகையால் பெந்தகோஸ்து உலகலாவிய ஒற்றுமையின் தொடக்கமாகவும் பார்க்கப்படுகிறது.

**சாட்சி: நம்பிக்கையின் வெளிப்பாடு**

பெந்தகோஸ்துக்குப் பிறகு, அப்போஸ்தலர்களின் வாழ்க்கையில் மிகத்தெளிவான மாற்றம் - அவர்கள் தைரியமான சாட்சிகளாக மாறியது. முன்பு பயத்தில் இருந்த அவர்கள், இப்போது மக்கள்முன் நின்று நம்பிக்கையை அறிவிக்கத் தொடங்கினர். "பேதுரு எழுந்து சத்தமிட்டுக் கூறினான்... " (திருத்தூதர் பணிகள் 2:14) இந்த மாற்றம் உண்மையான ஆன்மீக அனுவம் உள்ளத்தில் மட்டும் மறைந்திருப்பதில்லை என்பதைக் காட்டுகிறது. அது வார்த்தைகளிலும் செயல்களிலும் வெளிப்படும். சாட்சி என்பது வெறும் பேசுவது அல்ல; அது வாழ்வின் மூலம் வெளிப்படும் நம்பிக்கை. இதன்மூலம் "ஏறுபோல் நட" என்ற அழைப்பு செயல்முறையாக மாறுகிறது - உள்ளார்ந்த மாற்றம் வெளிப்படையான வாழ்வாக வெளிவருகிறது.

**மனந்திரும்புதல்: மாற்றத்தின் முதல்படி**

பெந்தகோஸ்து செய்தியைக் கேட்ட மக்கள் உள்ளத்தில் தட்டுப்பாடு உணர்ந்து "நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டனர். அதற்குப்



Scanned with OKEN Scanner

பேதுரு "மனந்திரும்புங்கள்" (திருத்தூதர் பணிகள் 2:38) என்று பதிலளித்தார். இந்த அழைப்பு மாற்றத்தின் அடிப்படையான தொடக்கத்தை வெளிப்படுத்துகிறது.

மனந்திரும்புதல் என்பது வெறும் தவறுகளை ஒப்புக்கொள்வது அல்ல; அது மனப்போக்கின் மாற்றம். வாழ்க்கைத் திசையின் மாற்றம். மனிதன் தனது பழைய வழிகளை விட்டுவிட்டு புதிய வாழ்க்கையைத் தேர்ந்ததெடுக்கிறான். இதன்மூலம் நாம் அறிகிறோம் – உயர்வு வெளிப்புற முயற்சிகளால் அல்ல; உள்ளார்ந்த மனமாற்றத்தின் மூலம் ஆரம்பமாகிறது.

**சமுதாய உருவாக்கம்: திருச்சபையின் பிறப்பு**

பெந்தகோஸ்து நிகழ்வு தனிப்பட்ட ஆன்மீக அனுபவத்தில் முடிவடையவில்லை. அது ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குகிறது. அந்த மக்கள் ஒன்றிணைந்து, புதிய வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டனர். "அவர்கள் அப்போஸ்தலர்களின் போதனையில் உறுதியாய் இருந்தனர்" (திருத்தூதர் பணிகள் 2:42) இந்த சமுதாயம் ஒரு சாதாரணக் கூட்டம் அல்ல; அது நம்பிக்கை, போதனை மற்றும் உறவின் அடிப்படையில் அமைந்த ஒன்று. இதுவே திருச்சபையின் ஆரம்பமாகும். இதன்மூலம் மனிதன் தனியாக அல்லாமல், மற்றவர்களுடன் இணைந்து வளரவேண்டும் என்ற உண்மை வெளிப்படுகிறது.

**பகிர்வு வாழ்கை: அன்பின் நடைமுறை**

ஆரம்பக் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் அன்பை நடைமுறையாக வெளிப்படுத்தினர். அவர்கள் தங்கள் சொத்துக்கபைப் பகிர்ந்து ஒருவருக்கொருவர் உதவினர். "அவர்களுக்குள் எவருக்கும் குறைவில்லை" ( திருத்தூதர்பணிகள் 4;34 ). இந்தப் பகிர்வு வாழ்க்கை அவர்களின் உள்ளார்ந்த மாற்றத்தின் வெளிப்பாடாகும். உண்மையான உயர்வு தனிப்பட்ட சேமிப்பில் அல்ல; அது பிறரின் தேவைகளை கவனித்து அன்புடன் பகிர்வதில் உள்ளது. இது சமுதாயத்தில் சமத்துவத்தையும் அக்கறையையும் உருவாக்குகிறது.

**தினசரி வாழ்வு: ஆன்மீக நிலைத்தன்மை**

பெந்தகோஸ்து ஒருநாள் அனுபவமாக மட்டும் இருக்கவில்லை. அது அவர்களின் தினசரி வாழ்க்கையாக மாறியது. அவர்கள் தொடர்ந்து ஒன்றுகூடி, ஜெபத்தில், போதனையில் மற்றும் உறவுகளில் வளர்ந்தனர். இந்த நிலைத்தன்மை அவர்களின் நம்பிக்கையை உறுதியாக்கியது. இதன்மூலம் நாம் அறிகிறோம் – உயர்வு ஒரு நாள் நிகழ்வு அல்ல; அது தொடர்ச்சியான நடைமுறை. தினசரி சிறிய செயல்கள், ஒழுக்கம், மற்றும் ஆன்மீக வாழ்க்கை மூலம் மனிதன் மெதுவாக உயர்கிறான்.

**இன்றைய வாழ்க்கைக்கான அழைப்பு:**

இன்றைய உலகில் மனிதன் வெளிப்புற வளர்ச்சியில் முன்னேறினாலும், உள்ளார்ந்த அமைதியை இழந்திருக்கிறான். தொழிநுட்ப முன்னேற்றம் இருந்தாலும், மனஅமைதி குறைந்து வருகிறது. இந்த நிலையில், பெந்தகோஸ்து நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகிறது. உண்மையான உயர்வு ஆவியின் வழிநடத்தலில் உள்ளது.

"ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் கடவுளின் பிள்ளைகள்" (உரோமையர் 8:14) இந்த வசனம் மனிதன் தனது வாழ்க்கையை கடவுளின் ஆவிக்குள் ஒப்படைக்கும்போதுதான் உண்மையான திசையை அடைகிறான் என்பதைக் காட்டுகிறது. ஆகையால், இன்றைய மனிதனுக்கான அழைப்பு தெளிவானது. வெளிப்புற வெற்றியைத் தேடுவதற்குப் பதிலாக, உள்ளார்ந்த உயர்வை நோக்கி நடக்கவேண்டும்.

**முடிவுரை**

"ஏறுபோல் நட" என்பது ஒரு அழைப்பு மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை. பெந்தகோஸ்து விழா நமக்குக் கற்றுத்தருவது – உயர்வு வெளியில் அல்ல; உள்ளத்தில் தொடங்குகிறது. கடவுளின் ஆவியை ஏற்றுக்கொண்டு, நம்பிக்கையுடன் வாழும்போது, மனிதன் தனது உண்மையான உயர்வை அடைகிறான். இந்த பெந்தகோஸ்து விழாவில், நாம் ஒவ்வொருவரும் ஆவியால் வழிநடத்தப்பட்டு, உயர்ந்த வாழ்க்கையை நோக்கி நடைபோடுவோம்.



Scanned with OKEN Scanner



# கிறிஸ்தவமும் இந்திய சட்டங்களும்

**நீதி, அன்பு, சமத்துவம் மனித குலத்திற்கான நிலையான வழிகாட்டி**

திரு. S. அருள் ஜெயராஜ் MSW.,LLB
வழக்கறிஞர், சிவகங்கை

இந்தியாவுக்கு கிறிஸ்தவம் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டது என்பதுதான் உண்மை. அதாவது இயேசுவின் 12 சீடர்களுள் ஒருவரான புனித தோமையர் கி.பி. 52–ல் இந்தியா வந்து, கேரளம் மற்றும் தமிழகப் பகுதிகளில் கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையைப் பரப்பினார். இறுதியாக இவர் சென்னையில் தோமையார் மலை என்று இப்போது அழைக்கப்படும் பரங்கிமலையில் இயேசு கிறிஸ்துவுக்காக உயிர்த்தியாகம் செய்தார். ஆகவே இந்தியாவில் கிறிஸ்தவர்கள் சுமார் 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றி வருகின்றார்கள். ஆகவே கிறிஸ்தவம் உலகம் முழுவதும் பரவிய அந்தக் காலகட்டத்திலேயே இந்தியா வந்தது என்பதும் வரலாறு.

கிறிஸ்தவமும் இந்தியச் சட்டங்களும் என்ற தலைப்பை ஆராய்வதற்கு முன், கிறிஸ்தவமும் உலகச் சட்டங்களும் பற்றி சில அம்சங்களை முதலில் பார்க்கலாம். உலகத்தில் உருவான சட்டங்களின் நெறிமுறைகள் மற்றும் நீதிக்கோட்பாடுகளில் விவிலியத்தின் தாக்கம் காணப்படுவது உண்மையாகும். உதாரணமாக, பத்துக் கட்டளைகளில் காணப்படும் கொலை செய்யக்கூடாது, திருடக்கூடாது போன்ற நெறிமுறைகள் பின்னர் பல நாடுகளின் குற்றச்சட்டங்களில் (Criminal Law) முக்கிய கருத்துகளாக இடம் பெற்றுள்ளன. அதேபோல், நீதிமன்றங்களில் சாட்சி அளிக்கும் போது உண்மையைப் பேச வேண்டும் என்ற சத்தியப்பிரமாணம் எடுக்கும் நடைமுறையும் கிறிஸ்தவ மரபின் தாக்கத்தால் வலுவடைந்தது. மேலும், ஒரே கணவர்/மனைவி என்ற திருமணக் கருத்தும் கருணை, நீதி, சமத்துவம் போன்ற மதிப்பீடுகளும் பல சட்டக் கோட்பாடுகளில் பிரதிபலித்துள்ளன.

1773 முதல் 1947 வரையிலான காலகட்டத்தில் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் இயற்றிய சட்டங்களைப் பற்றியும் பார்ப்போம். கிறிஸ்தவ பெரும்பான்மை கொண்ட ஆங்கிலேயர்களும் மற்றும் பிற ஐரோப்பிய அரசுகளும் 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை (சுமார் கி.பி.1500–1950), உலகின் 100–க்கும் மேற்பட்ட நாடுகளை தங்களது காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டு வந்திருந்தனர் என்பது வரலாறு. குறிப்பாக, பிரிட்டிஷ் பேரரசு 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் உலக நிலப்பரப்பின் சுமார் 25% பகுதியை ஆட்சி செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவமும் இந்தியச் சட்டங்களும் என்ற தலைப்பின் கீழ் ஆராய்ந்தால், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன், குறிப்பாக 1773 முதல் 1947 வரை உள்ள காலகட்டத்தில், பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய ஆட்சியாளர்கள் இந்திய சட்ட துறைக்கு 500–க்கும் மேற்பட்ட

சட்டங்களை இயற்றி முக்கிய பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது தெளிவாகும். அந்த 500–க்கும் மேற்பட்ட சட்டங்கள் இன்றளவும் இந்திய சட்ட அமைப்பின் மூலமாகப் பயன்பட்டு, சுதந்திர இந்தியாவில் புதிய சட்டங்களை உருவாக்க வழிகாட்டுகின்றன. ஆகவே, இந்திய சட்ட வரலாற்றில் பிரிட்டிஷ் மற்றும் பிற ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது என்றால் அது மிகையாகாது.

அதில் நாம் முக்கியமாக பார்க்க வேண்டியது 1773 முதல் 1947 காலகட்டத்தில் இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷ் மற்றும் மற்ற ஐரோப்பிய ஆட்சியாளர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், அவர்கள் இயற்றிய சட்டங்கள் அதிகாரப்பூர்வ காலனித்துவ சட்டங்களாகும். இச்சட்டங்கள் பிரிட்டிஷ் இந்தியாவின் நிர்வாகம், ஆட்சி மற்றும் கட்டுப்பாட்டிற்காக உருவாக்கப்பட்டவை. உதாரணமாக:

- இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code - IPC) 1860–ல், தாமஸ் பேபிங்டன் மெக்காலே (Thomas Babington Macaulay அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது
- இந்திய சாட்சியச் சட்டம் (Indian Evidence Act) 1872–ல் சர் ஜேம்ஸ் ஃபிட்ஸ்ஜேம்ஸ் ஸ்டீபன் (Sir James Fitzjames Stephen) அவர்களால் வடிவமைக்கப்பட்டது
- சொத்து மாற்றச் சட்டம் (Transfer of Property Act) 1882–ல் சர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine) உள்ளிட்ட சட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது
- இந்திய ஒப்பந்தச் சட்டம் (Indian Penal Code - IPC) 1872

இச்சட்டங்கள் அனைத்தும் தர்க்கம் (Logic) சட்டக் கோட்பாடுகள் (Legal Principales) மற்றும் ஒப்பீட்டு சட்ட ஆய்வு (Comparative Law) ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தவை. அதன் முக்கியத்துவத்தைப் பற்றி அடுத்த மாத கட்டுரையில் அறிந்துகொள்வோம். ●

# முதல் சம்பளம்

நல்லாசிரியர் கவிஞர். **எல். பிரைட்**

காலையில் எழும்பி
மூஞ்சி கழுவி
குளிக்க வச்சு
டிபன் ஊட்டி
சாப்பாடு ஊட்டி
ஷூ மாட்டி
பள்ளிக்கி அனுப்பிய
தெரசா பாட்டிக்கும்



அடாது மழை பெய்தாலும்
விடாது என்னை
பள்ளிக்குக் கூட்டிப்போய்
பத்திரமாய்க் கூட்டி வந்த
ஆட்டோ தாத்தா
ஆறுமுக ஐயாவுக்கும்

மதிய உணவு வேளையில்
பிரியாணிச் சோறும்
பீப் துண்டும்
பகிர்ந்து கொண்டு உண்ட
பள்ளித் தோழன்
ஜமால் பயலுக்கும்

மாலை வேளையில்
வீடு திரும்பியதும்
வயது பார்க்காமல்
என்னுடன்
கிட்டி விளையாடிய
எதிர் வீட்டு
சந்திரன் மாமாவுக்கும்
மறக்காமல்
பரிசுப்பொருள்
வாங்கி வைத்திருக்கிறேன்

இன்று
எனது
முதல் சம்பளம்.





வாழ்வியல் செய்தி

# தொழிலாளர்களின் பாதுகாவலர் புனித யோசேப்பு

அருள்சகோதரி. **ஜெனஸ்**
மானாமதுரை

மே மாதம் முதல் நாள் நாம் கொண்டாடுகின்ற விழா புனித சூசையப்பர், தொழிலாளர்களின் பாதுகாவலர் என்கின்ற விழாவாகும். புனித சூசையப்பர் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்தான் பாதுகாவலர். அவருடைய தொழில் எல்லோருக்கும் தெரிந்ததுதான் தச்சுத்தொழில். அவர் ஒரு கார்பெண்டர். இந்தத் தச்சுத் தொழில் செய்பவர்களிடம் நாம் ஏதாவது ஒரு பொருட்கள் செய்து தருமாறு கொடுத்தால் ஒருசில தொழிலாளர்கள் குறிப்பிட்ட நாட்களில் கொடுக்கமாட்டார்கள். நிறைய நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று எடுத்துக்கொண்டு தாமதப் படுத்துவார்கள். அது அநேக இடங்களில் நாம் சந்திக்கக்கூடிய ஒரு சவால். ஆனால் இப்படியான சூழ்நிலைகளில் நீங்கள் காத்திருந்துவிட்டு பிறகு போய்க் கேட்டுப்பாருங்கள் உங்களுடைய பொருட்களை அவ்வளவு அருமையாகச் செய்திருப்பார்கள். அந்த ஒரு வாரம் பொறுமையோடு காத்திருக்கவேண்டியிருந்தது. அந்தப் பொறுமை உங்களுக்கு தரப்படுகின்ற பரிசு. நீங்கள் கொடுத்த பொருட்களை எந்த அளவுக்கு அற்புதமாக வரவேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதைவிட அற்புதமாக உங்களுக்குச் செய்து சீர்செய்து கொடுக்கப்படும்.

புனித சூசையப்பர் ஒரு தச்சர். அவரிடம் நிறையப்பேர் பொருட்கள் செய்யக் கொடுத்திருப்பார்கள். அவர் என்ன செய்திருப்பார். இதேபோல ஒருசில நேரத்தில் சொல்லியிருப்பார். வீட்டில் கொஞ்சம் வேலையாகப் போய்விட்டது. எனவே, அடுத்த வாரம் வாருங்கள். அடுத்த வாரம் அவர்கள் வரும்போது, அதனை அற்புதமாகப் பார்ப்பதற்கு அழகாகச் செய்து கொடுத்திருப்பார். இங்கே உள்ள காரியம் என்னவென்றால் நம்முடைய விருப்பம் நிறைவேற வேண்டுமென்றால் நாம் நினைத்த நேரத்தில் அந்த விருப்பம் நிறைவேற வில்லை என்றால் அதற்காக அந்த விருப்பம் நிறைவேறும் வரை காத்திருக்க வேண்டும் என்கின்ற ஒரு படிப்பினையை இன்று புனித சூசையப்பர் கற்றுத்தருகின்றார். தி.பா 27:14 நம்முடைய விருப்பமா... விருப்பம் நிறைவேற வேண்டும் என்றால் நாம் அதற்காகப் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். இவ்வாறு பொறுமையோடு நாம் காத்திருக்கும் வேளையில் அதே திருப்பாடல் அடுத்தகட்டமாகச் சொல்லுகின்றது, நீங்கள் காத்திருக்கும் வேளையில் இதயம் கலங்கக்கூடாது.

சில நேரங்களில் நமக்குத் தெரியும் இது நமக்கானதுதான். இந்த வேலை நமக்குத்தான். எனக்குத்தான் அந்தவேலை கிடைக்கும். எனக்குத்தான் அந்த வீடு கிடைக்கும். எனக்குத்தான் அந்த நிலம் கிடைக்கும். எனக்குத்தான் அந்தப் பதவி கிடைக்கும். இப்படியெல்லாம் நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேரங்களில் நாம் நினைத்த நேரத்தில் நமக்குக் கிடைக்கவில்லையென்றால் நமக்கு உடனடியாக மனது உடைந்து போய்விடும். டாக்டர் சொன்னார், ஒரு ஐந்து நாட்கள் இந்த மாத்திரையை எடுத்துக்கொண்டல் ஆறாவது நாள் உங்கள் உடம்பில் இருந்து நோய் எங்கே போனது என்று




Scanned with OKEN Scanner

தெரியாத அளவிற்கு நீங்கள் ஆரோக்கியம் அடைந்துவிடுவீர்கள் என்று ஐந்து நாட்கள் மாத்திரை எடுத்தீர்கள். ஆறாவது நாள் அதே நோயோடு அதே வியாதியோடு இருக்கிறீர்கள். இப்பொழுது டாக்டர் சொன்னபடி நடக்கவில்லையே டாக்டர் சொன்னது தவறா? என்று இதயம் கலங்குகின்ற வாய்ப்பு வருகின்றதே நாம் எதிர்பார்த்த கனவு கைகூடி வரவில்லை. அதுவும் நான் எதிர்பார்த்த நேரத்தில் நமக்குக் கைகூடி வரவில்லை. வாய்ப்புகள் தவறுகின்றபோது மனசு கலங்கிப்போகும். ஆனால் அந்தக் கலக்கத்தின் நேரத்தில் ஆண்டவராகிய கடவுள் புனித சூசையப்பரை நமக்கு உதாரணமாகக் காண்பித்து சொல்லுகின்றார். இந்தத் தச்சர் உங்களுக்கான பொருட்களை சரியாக அற்புதமாக செய்துதரவேண்டும் என்றால் நீங்கள் எதிர்பார்க்கின்ற நேரத்தில் உங்களுக்குத் தரவில்லை என்றால் அவர் தருகின்ற பொழுது அவர் தரமாகத்தான் தருவார். ஆண்டவர் நாம் கேட்கின்ற காரியத்தை தராமல் போகமாட்டார். ஆனால் நாம் செய்யவேண்டியது என்ன? பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

ஆம், அன்பு சகோதரமே, நான் இன்றுவரைக்கும் ஆண்டவரிடமிருந்து என்னென்ன ஆசீரான காரியங்களுக்காக காத்திருக்கின்றோம். உடல் ஆரோக்கியத்திற்காக காத்திருக்கின்றோம். திருமண பாக்கியத்திற்காக காத்திருக்கின்றோம். குழந்தை வரம்வேண்டி காத்திருக்கின்றோம். பலர் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கின்றனர். பொருளாதார முன்னேற்றம் கிடைக்கவேண்டும் என்று காத்திருக்கின்றோம். இன்னும் குடும்பத்தில் அமைதி, ஒற்றுமை வேண்டுமென்று காத்திருக்கின்றோம். இன்னும் எத்தனையோ காத்திருப்புகள். ஆண்டவர் சொல்லுகின்றார். சூசையப்பாரைப் பாருங்கள், அவர் நமக்காகப் பொருட்களைத் தரமானதாக தாமதாமாகக் கொடுப்பார். ஆண்டவர் நமக்காக ஆசீர்வாதங்களைக் கொடுப்பார். ஆனால் தாமதமாகக் கொடுப்பார். அவர் தருகின்ற ஆசீர் தரமானதாக பெற்றுக்கொள்வோராக இருந்தால் உரிமையோடு காத்திருப்போம்.

விலைமதிப்பில்லா ஆசீரையும் குடும்ப நலன்களையும் பெற்றுக்கொள்வோம்.




**திருமண முன்தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்**

| எண் | தேதி | கிழமை | இடம் |
|---|---|---|---|
| 1 | 09.05.2026 - 10.05.2026<br>30.05.2026 - 31.05.2026 | சனி, ஞாயிறு<br>சனி, ஞாயிறு | தேவகோட்டை<br>இராமநாதபுரம் |



Scanned with OKEN Scanner

## புனித வின்சென்ட் தே பவுல் சபை
## மத்திய சபை–சிவகங்கை



# 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாத பணிகள் விபரம்



**தங்கள் கவனத்திற்கு**

கடந்த மாத கங்கைதூது இதழில் வின்செந்திய செய்திகள் பிரிவில் வெளிவந்த ஞாயிறு காணிக்கை விபரத்தில், பரமக்குடி கிளைச்சபையின் காணிக்கை ரூ. 26,000/- என்று இருப்பதற்குப் பதிலாக ரூ. 2600/- என்று அச்சுப்பிழை ஏற்பட்டுவிட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

### 2026 ஏப்ரல் மாதம் நமது சபையினரால் செய்யப்பட்ட பிறரன்புப் பணிகள் விபரம்

| வ.எண். | கிளைச்சபை | வட்டாரம் | நபர்கள் | உதவித்தொகை | |
|---|---|---|---|---|---|
| 1. | காளையார்கோவில் | சூசையப்பர்பட்டணம் | 1 | கல்வி உதவி | 10,000 |
| 2. | அரியக்குடி | காரைக்குடி | 1 | திருமண உதவி | 10,000 |
| 3. | திருப்பத்தூர் | கல்லல் | 1 | பால்மாடு உதவி | 10,000 |
| 4. | ஆனந்தா கல்லூரி | - | 10 | கல்வி உதவி | 39,400 |

❖ 2025-26 ஆம் ஆண்டுக் கணக்கினை 10.04.2026 முதல் 22.04.2026 க்குள் அனைத்து வட்டார சபைகளின் கணக்கினை சிறப்பாக முடித்துக்கொடுத்த மத்திய சபை பொறுப்பாளர்கள் மற்றும் கணக்குக்குழு உறுப்பினர்கள், வட்டார சபை மற்றும் கிளைச்சபை தலைவர்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துக்களும் தெரிவித்துக்கொள்கிறோம்.

❖ மத்திய சபையின் முன்னாள் தலைவரும், பரமக்குடி வட்டாரம் மற்றும் கிளைச்சபைகளின் முன்னாள் தலைவருமான சகோ. P. மரிய சந்தியாகு 20.04.2026 இறைவனில் நித்திரையானார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

❖ 07.04.2026 அன்று ஆனந்தா கல்லூரியில் வின்செண்ட் தே பவுல் சபைகளின் ஆண்டறிக்கைக் கூட்டம் நடை பெற்றது. இதில் ஆன்மீக இயக்குனர் அருள்பணி. செபஸ்தி அவர்கள் தலைமை தாங்கினார். முதல்வர். அருள்பணி. ஜார்ஜ் மற்றும் துணை முதல்வர் அருள்பணி. டென்சிங் ராஜன் ஆகியோரின் முன்னிலையில் மத்திய சபை தலைவர், செயலர் மற்றும் பொருளர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். எழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

❖ சிவகங்கை மத்திய சபை, தேவகோட்டை வட்டாரம் உட்பட்ட கஸ்பா நகர் பங்கு புனித வின்செண்ட் தே பவுல் லூர்து அன்னை கிளைச் சபை 12.04.2026 ஞாயிற்றுக்கிழமை, பங்குத்தந்தை அருட்பணி. சௌந்தர் சுந்தரம் அவர்களின் முன்னிலையிலும், மத்திய சபையின் முதன்மைப் பணியாளர் சகோதரர் வே. பெர்னாட்ஷா அவர்களும், ஆர்.எஸ். மங்கலம் வட்டார சபையின் செயலர் சகோதரர் அந்தோணி ராஜ்குமார் ஆகிய இருவரின் முன்னிலையிலும் புதிய கிளையானது உருவாக்கப்பட்டு கிளைச்சபையின் தலைவராக சகோதரர் சேவியர் அவர்களும், செயலாளராக சகோதரி சரஸ்வதி அவர்களும், பொருளராக சகோதரர் பிரகாஷ் அவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 23 உறுப்பினர்களும் இணைந்துள்ளனர். சபை உருவாவதற்கு உறுதுணையாக இருந்த



Scanned with OKEN Scanner

அருள்பணியாளர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, சபை சிறப்பாக பிறரன்புபணியில் சிறந்துவிளங்க வாழ்த்துகிறது பாராட்டுகிறது. சிவகங்கை மத்திய சபையின் முதன்மைப் பணியாளர்கள் சார்பாக மத்திய சபையின் செயலர் சகோதரர் வி. அலெக்சாண்டர் அவர்கள் நன்றி கூறினார்கள்.

❖ புனித வின்சென்ட் தே பவுல் சபை சிவகங்கை மத்திய சபைக்கு உட்பட்ட சூசையப்பர்பட்டணம் வட்டார சபையைச் சார்ந்த கீழ உச்சாணி கிளைச் சபையில் 2026-27 க்கான முதல் காலாண்டுக் கூட்டம் 19.04.26 காலை 10 மணிக்கு ஆவியானவர் பாடலுடன் ஆரம்பமானது. அனைவரையும் கிளச்சபை முதன்மை பணியாளர் சகோ மரியகண்ணு அவர்கள் வரவேற்றார்கள். கூட்டத்திற்கு வட்டார சபை தலைவர் ஏ. அருள் தலைமை ஏற்க கீழ உச்சாணி பங்குத்தந்தையும் ஆன்மீக ஆலோசகருமான அருட்ப பணி ஜேசுராஜ் கிறிஸ்டி மற்றும் மத்திய சபை முதன்மை பணியாளர் சகோ வே.பொ்னாட்ஷா முன்னிலை வகிக்க, மத்திய சபை செயலர் வி. அலெக்சாண்டர், பொருளாளர் S. அமிர்தசாமி மற்றும் துணை தலைவர் ஆன்ஸ்ராஜ் ஆகியோர் மற்றும் ஏழு கிளைச் சபை பொறுப்பாளர்களும் மற்றும் கீழ உச்சாணி கிளைச் சபை அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். கடந்த காலாண்டு கூட்ட அறிக்கையை வட்டார சபை செயலாளர் அருள்தாஸ் வாசித்து அனைவராலும் ஒப்புதல் பெறப்பட்டது. கடந்த மூன்று மாத கால வரவு செலவுகளை பொருளாளர் சகோதரர் ஜான் அந்தோணி வாசித்து கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. கலந்து கொண்ட ஏழு கிளைச் சபைகளின் கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தொடர்ந்து கலந்து கொண்ட அருட்பணி சேசுராஜ் கிறிஸ்டி அவர்கள் கூட்ட சிறப்புகள் பற்றி எடுத்துக்கூறி அனைவருக்கும் ஆசி வழங்கினார்கள்.


❖ மேலும் மத்திய சபை துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர், கிளையின் செயல்பாடுகள் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தார்கள். சென்ற 2025-26 ஆண்டுக்கான ஆண்டறிக்கை நமது வட்டார சபை முதலில் சமர்ப்பித்ததற்கு நன்றியும் கூறப்பட்டது. மேலும் வட்டார சபையின் தலைவர் சகோதரர் ஏ. அருள், நமது கிளைகள் வரும் நாட்களில் நடக்க வேண்டிய செயல்பாடுகள் பற்றியும் கடந்த மண்டல சபை ஆண்டுவிழாவில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். அனைத்து கிளைச் சபைகளும் வட்டார சபை வளர்ச்சியின் ஒத்துழைப்புக்கு நன்றியும் தெரிவித்தார்கள். இறுதியாக சிவகங்கை மத்திய சபையின் முதன்மை பணியாளர் சகோ. வி. பெர்னாட்ஷா அவர்கள் அனைத்து வகையிலும் நமது கிளைச் சபைகள், வட்டார சபை சிறப்பாக செயல்படுவது பற்றியும் அனைத்து உதவிகளும் இவ்வாண்டு பெறப்பட்டுள்ளது பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறி பாராட்டினார்கள்.

❖ இறுதியாக கிளைச்சபை செயலாளர் சகோதரர் லூயிஸ் நன்றி கூற இறுதிச்செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அனைத்து கிளை தலைவர், பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் வட்டார சபை சார்பாக நன்றியும் தெரிவிக்கப்பட்டது. மேலும் கிளைச் சபை சார்பாக வருகை புரிந்த அனைவருக்கும் மதிய உணவு சிறப்பாக வழங்கப்பட்டது.

❖ இளையான்குடி வட்டார சபை செயற்குழுக் கூட்டம், அருட்திரு. அமலன் அவர்கள் முன்னிலையில் மத்திய சபை தலைவர் தலைமையில் மத்திய சபை பொறுப்பாளர்கள், வட்டார சபை பொறுப்பாளர்கள் மற்றும் கிளைச்சபைத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் 24.04.2026 முற்பகல் நடைபெற்றது.



Scanned with OKEN Scanner



# என் உள்ளே வாருங்கள்



அருட்பணி. **பிலோமோன், திச**
உதவி பங்குத்தந்தை, தேவகோட்டை.

மனிதர்கள் ஆகிய நாம் பல்வேறு நிலைகளில் இறைவனை விட்டு வெகு தூரம் செல்கின்றோம். நம்முடைய காயங்கள், தவறான தேர்வுகள், கசப்பான வாழ்க்கை அனுபவங்கள் இவை அனைத்தும் நம்மை அவரிடமிருந்து விலகச் செய்கின்றன. சில நேரங்களில் நம்முடைய மனவேதனை கூட இறைவனைத் தேடாமல் தள்ளிவிடுகிறது. ஆனால் இன்று இறைவன் நம் ஒவ்வொருவரையும் அன்போடு அழைக்கிறார்: “உள்ளே வாருங்கள் என் இதயத்திற்குள் வாருங்கள்.”

இந்த உலகை நாம் தினமும் காண்கிறோம். அதன் அழகு, அதன் ஒழுங்கு, அதன் உயிர்மை இவை அனைத்தும் ஒரே உண்மையைச் சொல்கின்றன: படைத்தவர் எவ்வளவு அழகானவர்! உலகம் இவ்வளவு இனிமையாக இருந்தால், அதை படைத்த இறைவன் எவ்வளவு இனிமையானவராக இருப்பார்! ஆனாலும் நாம் அவரை முழுமையாக கண்டுணராமல் வெளிப்புற வாழ்க்கையிலேயே நின்றுவிடுகிறோம்.

இன்றைய நாளில் நாம் ஒவ்வொருவரும் இறைவனை முழுமையாக அறிய அழைக்கப்பட்டிருக்கிறோம். அவரை அறிய ஒரே வழி: அவரின் உள்ளே செல்லுதல். வெளிப்புற வழிபாடு மட்டும் போதாது; உள்ளம் திறந்து அவரை அனுமதிக்க வேண்டும். ஏனெனில் இறைவன் வெளியில் அல்ல, உள்ளத்தில் குடியிருக்க விரும்புகிறார்.

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே ,எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28) என்று இயேசு அழைக்கிறார். இந்த அழைப்பு ஒவ்வொருவருக்கும். காயங்களுடன் இருந்தாலும், குற்ற உணர்வுடன் இருந்தாலும், தூரம் சென்றிருந்தாலும், அவர் கதவு எப்போதும் திறந்ததே.

நாம் இறைவனின் உள்ளே செல்லும் போது, அவர் நம்முடைய உடைந்த இதயங்களை மென்மையாக்குகிறார். காயங்களை குணமாக்குகிறார். கசப்புகளை இனிமையாக்குகிறார். மனதில் இருந்த இருளை ஒளியாக மாற்றுகிறார். "நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோவான் 15:4) என்ற வார்த்தை நம் ஆன்மீக வாழ்க்கையின் மையமாகிறது.

இறைவனின் உள்ளே செல்லுதல் என்பது ஒரு ஆன்மீக பயணம். அது மனந்திரும்புதலால் தொடங்குகிறது. நம்முடைய பாவங்களையும் காயங்களையும் மறைக்காமல் அவரிடம் ஒப்படைப்பதே முதல் படி. “உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருகின்றன: எனினும் ,உறைந்த பனிபோல அவை வெண்மையாகும்" (எசா 1:18) என்று இறை வார்த்தை நமக்குச் சொல்கிறது.

ஆகையால், இன்று இறைவன் நம்மை அழைக்கிறார்:

**உன் காயங்களோடு வா!**
**உன் கண்ணீரோடு வா!**
**உன் உடைந்த இதயத்தோடு வா!**

அவரின் உள்ளே சென்றால், நம் வாழ்க்கை மாற்றம் பெறும். தூரத்தில் இருந்த நாம் அருகில் வருவோம். பயத்தில் இருந்த நாம் அமைதியை காண்போம். கசப்பில் இருந்த நாம் இனிமையை அனுபவிப்போம்.

இன்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய தீர்மானம் ஒன்றே:

“இயேசுவே, நான் உமது உள்ளே வருகிறேன்; என் இதயத்திற்குள் நீர் குடியிருக்க வாரும்.”




# உயிர்த்தெழுந்த இறைவன் நம்மில் ஒளிர!!

அருட்பணி. **பிலோமோன், திச**
உதவி பங்குத்தந்தை, தேவகோட்டை.

இந்த உலகில் ஒளி மிகுந்த முக்கியத்துவம் உடையது. ஒளி இல்லாத இடத்தில் இருள் ஆட்சி செய்கிறது; இருள் இருக்கும் இடத்தில் பயமும் குழப்பமும் நிலைகொள்கிறது. ஆனால் ஒளி வந்துவிட்டால், இருள் தானாகவே மறைந்து விடுகிறது. இதுபோலவே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிகழ்ச்சி, மனித வாழ்க்கையில் ஒளி வெற்றி பெறும் மிகப் பெரிய சாட்சியாகும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து, ‘‘ஒளியின் மக்களாய் வாழுங்கள்’’ என்று நம்மை அழைக்கிறார். இந்த அழைப்பு ஒரு சாதாரண அழைப்பு அல்ல; அது நம் வாழ்க்கையை முழுமையாக மாற்றும் ஒரு தெய்வீக அழைப்பு.

இஸ்ராயேல் மக்கள் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் பயணம் செய்து, தேனும் பாலும் பொழியும் கானான் தேசத்தை அடைந்தார்கள். அதுபோலவே, நாம் கிறிஸ்தவர்கள் 40 நாள் தவக்காலத்தில் ஜெபம், தவம், நோன்பு ஆகியவற்றின் மூலம் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியை எதிர்நோக்கி பயணம் செய்கிறோம். இந்த பயணம் வெளிப்படையான ஒன்று அல்ல; அது நம் உள்ளத்தின் ஆழத்தில் நடைபெறும் ஆன்மிகப் பயணம்.

இன்று உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம் வாழ்க்கையில் ஒளியாக வந்து, நம் உள்ளத்தில் இருக்கும் இருளை நீக்குகிறார். பாவம், பயம், மனக்கசப்பு, மன்னிக்காத மனம், இவை எல்லாம் நம் உள்ளத்தின் இருளாக இருக்கின்றன. ஆனால் கிறிஸ்து நம் உள்ளத்தில் உயிர்த்தெழுந்தாள், அந்த இருள் மறைந்து, அன்பு, சமாதானம், மகிழ்ச்சி ஆகியவை மலரத் தொடங்குகின்றன.

இதனால் இன்று நாம் ஒளியின் மக்களாக வாழ மூன்று முக்கியமான சிந்தனைகளுக்கு அழைக்கப்படுகிறோம்.

**முதலாவது, நம்மில் உள்ள இருளை நீக்குவோம்.**

ஒரு காலத்தில் நாம் அனைவரும் இருளில் வாழ்ந்தவர்களே. பாவம் செய்யும் ஒவ்வொரு தருணமும் நாம் அந்த இருளில் விழுகிறோம். ஆனால் கிறிஸ்துவோடு இணைந்த வாழ்க்கை, நம்மை ஒளியாக மாற்றுகிறது. எபேசியர் 5:8ல், ‘‘ஒரு காலத்தில் நீங்கள் இருளாய் இருந்தீர்கள்; இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாக இருக்கிறீர்கள்’’ என்று கூறப்படுகிறது. நாம் எத்தனை முறை விழுந்தாலும், இறைவன் எப்போதும் நம்மை தூக்கிவிட தயாராக இருக்கிறார். ஆகவே, கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதே இருளை நீக்கும் வழியாகும்.

**இரண்டாவது, இறை இரக்கத்திலும் மன்னிப்பிலும் வளர்வோம்.**

ஒவ்வொரு நாளும் நாம் உறங்கிவிட்டு மீண்டும் விழிப்பது கூட இறைவனின் இரக்கத்தின் சாட்சி. நாம் தகுதியில்லாதவர்களாக இருந்தாலும், அவர் நமக்கு வாழ்க்கையைத் தொடர்ந்து வழங்குகிறார். லூக்கா 6:36 "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருந்துபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" என்று சொல்லப்படுகிறது.

நம்மிடம் யாராவது மன்னிப்பு கேட்க வந்தால், அவர்களை மன்னிக்க வேண்டும். மன்னிக்காமல் இருப்பது நம் உள்ளத்தை மேலும் இருளாக்கும். ஆனால் மன்னிப்பு, நம் உள்ளத்தில் ஒளியை ஏற்படுத்தும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியை உண்மையாக அனுபவிக்க, நாம் மன்னிக்கும் மனதை வளர்த்துக்கொள்ள வேண்டும்.


**மூன்றாவது, இறையன்பில் ஆழமாக வேரூன்றி வாழ்வோம்.**

இறையன்பே கிறிஸ்துவின் மிகப் பெரிய பரிசு. எபேசியர் 3:17, "அன்பில் வேரூன்றி நிலைத்திருங்கள்" என்று அழைக்கப்படுகிறோம். நம் வாழ்க்கையின் அடித்தளம் அன்பாக இருக்கும்போது, நாம் நல்ல கனிகள் தரும் மரமாக மாறுகிறோம். யோவான் 15:5, "நானே திராட்சைச் செடி; நீங்கள் கொடிகள்" என்று ஆண்டவர் கூறுகிறார். நாம் அவரோடு இணைந்திருந்தால், நிச்சயமாக நல்ல கனிகளைத் தருவோம்.

இறுதியாக, நாம் ஒளியின் மக்களாக மாறிய பின், அந்த ஒளியை பிறருடன் பகிர வேண்டும். விளக்கை ஏற்றி மறைத்து வைப்பதில்லை; அதை உயரத்தில் வைத்து அனைவருக்கும் ஒளி தருவோம் (மத் 5:15). அதுபோலவே, நம் வாழ்க்கை பிறருக்கு ஒளியாக இருக்க வேண்டும்.

அன்பிற்குரியவர்களே, உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமக்கு ஒரு புதிய வாழ்க்கையை அளிக்கிறார். அந்த வாழ்க்கை ஒளியின் வாழ்க்கை. நாம் நம்மில் உள்ள இருளை நீக்கி, இரக்கத்திலும் மன்னிப்பிலும் வளர்ந்து, இறையன்பில் வேரூன்றி வாழ்ந்தால், நம் குடும்பம் ஒளியாக மாறும்; நம் சமூகம் ஒளியாக மாறும்; இறுதியில் இந்த உலகமே ஒளியால் நிரம்பும்.

ஆகையால், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு இணைந்து, ஒளியின் மக்களாய் வாழவும் வளரவும் நாம் அனைவரும் முன்வருவோம்.



## மாறியது நெஞ்சம்

குளிர்தரும் காற்றையும்
மின்சாரம் வழங்கும் கரண்ட்டையும்
உணர்ந்துகொள்ள முடியும்
ஆனால்
அவைகளுக்கு
உருவம் இருக்கிறதா என்று
நாத்திகனான
என் நண்பனிடம்
எப்போதோ
கேட்டு வைத்த ஞாபகம்

ஆபத்தான
ஒரு
ஆக்ஸிடெண்டுக்குப்பின்
இப்போதெல்லாம்
ஆலயங்களுக்குச்
சென்று வருகிறானாம் அவன்
யாருக்கும் தெரியாமல்

நல்லாசிரியர் கவிஞர். **எல். பிரைட்**



Scanned with OKEN Scanner







Scanned with OKEN Scanner



"ஆண்டவர் தம் வல்ல செயல்களுக்காய் அவரைப் போற்றுங்கள்" திபா 150:2

# புனித அடைக்கல அன்னை ஆலயம்

## உதயனூர், சூராணம் பங்கு.

## முப்பெரும் விழா

**புதிய கொடிமரம் அர்ச்சிப்பு விழா**

**புதிய தேர் அர்ச்சிப்பு விழா**

மற்றும் **அடைக்கல அன்னை ஆலய திருவிழா**





**புதிய கொடிமரம் அர்ச்சிப்பு மற்றும் கொடியேற்றம்**

16.05.2026 சனிக்கிழமை

மாலை 5.00 மணி

**தொடர்ந்து திருவிழா திருப்பலி**

**தலைமை**

மேதகு முனைவர் **L.ஆனந்தம்** D.D.,Ph.D.,Dr.Theol.

சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

---

17.05.2026 ஞாயிற்றுக்கிழமை

காலை 08.30 மணி

**திருவிழா திருப்பலி**

**திருப்பலி நிறைவேற்றுபவர்**

உதயனூர் - மண்ணின் மைந்தர்

அருள்பணி. **இ. மைக்கேல் ஜான் Ssp**

இயக்குநர், புனித பவுல் புக்ஸ் & மீடியா

பிரைவேட் லிமிடெட், சென்னை



அனைவரும் திருவிழாவிற்கு வருகைபுரிந்து அன்னையின்

ஆசி பெற்றுச் செல்ல அன்புடன் வேண்டுகிறோம்.

*அன்புடன் அழைக்கும்*

அருள்பணி. **V. சூசைமிக்கேல்,** பங்குப்பணியாளர்

அருள்பணி. **R. பிரவின் அருள்செல்வன்,** உதவிப் பங்குப்பணியாளர்

**அமலவை அருட்சகோதரிகள்,**

**தெலசாள் அருட்சகோதரர்கள்**

**கிராம மக்கள்,** உதயனூர்

*அனைவரும் இறையருள் பெற வாழ்த்தும்...*


**குமரிசோலார் சொலுஷன்ஸ்**

அன்பு காம்ப்ளக்ஸ், துதிநகர், மைக்கேல் கல்லூரி அருகில்,

காளையார்கோவில், சிவகங்கை - 630 551.

**மணிமாறன்** ஆசிரியர் - **ராஜாத்தி** ஆசிரியை

**குடும்பத்தினர்,** உதயனூர்

**9790204097**


Scanned with OKEN Scanner